# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 மார்கழி / டிசம்பர் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


### தேசத்தின் குரல்

## சிறைக் கதவே தாழ் திறவாய்!




தமிழ்நாட்டில் வாழ்நாள் சிறைப்பட்டோர் (ஆயுள் கைதிகள்) விடுதலை என்பது தீராச் சிக்கலாகவே தொடர்கிறது. குறிப்பாக இராசீவ் கொலை வழக்கில் வாழ்நாள் சிறைப்பட்டு முப்பதாண்டுக்கு மேல் கழித்துள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன், இரவிச்சந்திரன், இராபர்ட் பயஸ், ஜெயக்குமார், நளினி

## உள்ளே...


1. தேசத்தின் குரல் - 1
2. மைசூர்ப் புலி திப்பு சுல்தான்- 5
3. இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் (2) - 13
4. விவசாயிகளின் வழியில் தொடர்வோம் - 24
5. அயல்நாட்டுக் கொடுப்பு நிலை - 34
6. வரித்தள அரிப்பும் இலாபக் கடத்தலும் - 41
7. மாற்று விலை - 46


பதிவு எண் :R.Dis. No. 1964/2014



ஆகிய எழுவரையும் விடுதலை செய்ய மாநில அமைச்சரவையே முடிவெடுத்த பிறகும் தில்லி ஆட்சியாளர்கள் தமிழக ஆளுநரைப் பயன்படுத்தித் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். எழுவர் விடுதலையில் இனி எந்தச் சட்டச் சிக்கலும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ள உச்ச நீதிமன்றம்தான் இதில் நல்ல முடிவு சொல்ல வேண்டும். அல்லது இதையே உயர் நீதிமன்றமும் செய்யலாம். தமிழக அரசைப் பொறுத்த வரை எழுவர் விடுதலை என்ற முடிவில் உறுதியாகவே இருப்பதை உச்ச நீதிமன்றத்தில் தெளிவாக்கியுள்ளது.

ஆனால் முசுலிம் சிறைப்பட்டோர் விடுதலை தொடர்பாக நம்பிக்கையற்ற சூழலே நீடிக்கிறது. திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று நீண்ட காலமாகச் சிறையில் வாடிக்கிடக்கும் முஸ்லிம் கைதிகளை விடுதலை செய்வோம் என்பதாகும். திரு முக ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்களின் பரப்புரையிலும் இந்த வாக்குறுதி இடம் பெற்றது. திமுக கூட்டணிக் கட்சிகளின் நிலைப்பாடும் இதுவே. எதிர்க்கட்சிகளிலும் பாஜக தவிர எந்தக் கட்சியும் முசுலிம் சிறைப்பட்டோரின் விடுதலையை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு மட்டும் சிறைக்கதவு திறந்த பாடில்லை.

ஆட்சிக்கு வந்த பின் சட்டப் பேரவையிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நீண்டகாலமாகச் சிறையில் இருப்பவர்கள் அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

எந்தவொரு சிறைப்பட்டவருக்கும் சட்த்துக்குப் புறம்பாக நாம் விடுதலை கேட்கவில்லை. 'நான் முதலமைச்சரானால் சிறைக்கதவைத் திறந்து விடுவேன்' என்பது போன்ற வெற்றுவேட்டுப் பேச்சுகளிலும் நமக்கு நம்பிக்கை இல்லை.

சட்டம் ஒரு பக்கம், இந்திய அரசின் உள்நோக்கங்கொண்ட முட்டுக்கட்டைகள் மறு பக்கம், திட்டவட்டமான ஆணைகள் பிறப்பிக்க நீதிமன்றங்களின் தயக்கம் இன்னொரு பக்கம் .... இத்தனைக்கும் நடுவில்தான் மாநில அரசு இவ்வகையில் செயல்பட வேண்டியுள்ளது என்பதை அறிந்தேற்கிறோம்.

ஆனால் 15.11.2021இல் அரசு பிறப்பித்துள்ள அரசாணை எண் 488 / 2021 அரசின் நோக்கம் பற்றிய ஐயங்களைக் கிளறுவதாக உள்ளது. எப்படிப் பார்த்தாலும், வாழ்நாள் சிறைப்பட்டோர் உள்ளிட்ட நீண்ட காலச் சிறைப்பட்டோர் முன்-விடுதலை குறித்து அரசுக்கு ஒரு தெளிவான பார்வை இல்லை என்பதைக் காட்டுவதாக உள்ளது. ஏனென்றால் முன்விடுதலைக்கான வழிவகையிலிருந்து "பயங்கரவாத"ச் சிறையாளர்களையும், மதம் வகுப்பு தொடர்பான குற்றங்களில் தண்டிக்கப்பட்டவர்களையும் இந்த அரசாணை விலக்கி வைக்கிறது.

குற்றம் எதுவானாலும் பத்து இருபது ஆண்டுச் சிறையடைப்புக்குப் பிறகும் குற்றவாளியைத் திருத்தவே முடியாது என்றால் அது இந்தச் சிறையமைப்பின் குறையைத்தான் காட்டுகிறது.

குற்றத் தீர்ப்பு வழங்கும் போது குற்றத்தைப் பார், குற்றவாளியைப் பார்க்காதே! தண்டனையின் அளவைத் தீர்மானிக்கும் போது குற்றத்தையும் குற்றவாளியையும் பார்! தண்டனை கழித்து விடுதலை செய்வது பற்றி முடிவெடுக்கும் போது குற்றத்தைப் பார்க்காதே, குற்றவாளியை மட்டும் பார்! - இது சீர்திருத்த ஒறுத்தலியலின் அடிப்படையாகும். இராசீவ் கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தாமஸ், காத்ரி, வாத்வா ஆகிய மூன்று நீதியரும் தத்தமது தீர்ப்பில் இந்தக் கருத்தை வலியுறுத்தக் காணலாம்.

ஒருவர் ஒரு முறை பயங்கரவாதக் குற்றம் அல்லது மதவாதக் குற்றம் புரிந்தால் என்றுமே அவ்வகைக் குற்றவாளியாகத்தான் இருப்பார் என்பது ஏரணப் பொருத்தமற்றது. அது உண்மையும் அன்று. ஒவ்வொரு புனிதனுக்கும் ஒரு கடந்த காலம் உண்டு, ஒவ்வொரு பாவிக்கும் ஓர் எதிர்காலமும் உண்டு என்ற செய்தியை நீதியர் கிருஷ்ணய்யர் பல முறை எடுத்துக்காட்டியுள்ளார்.

எவர் ஒருவரையும் விடுமையின் நம்பிக்கையொளிக் கீற்று தொலைவில் கூட தெரியாமல் சிறையிருளில் அடைத்து வைப்பதுதான் சிறையில் இறுகிய குற்றவாளிகளைப் பயிர் செய்யும் வழி எனலாம். .

முசுலிம் சிறைப்பட்டோரில் எவரை எவ்வளவு காலம் கழித்து விடுதலை செய்தாலும், மோதியின் மதவெறி ஆட்சி முட்டுக்கட்டை போடும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இந்த முட்டுக்கட்டைகளை சட்டப்படி வெல்வதற்கான வழிமுறைகளில் மாநில அரசு முதலடி கூட எடுத்து வைக்கமாலிருப்பது ஏன்? என்பதற்கு விளக்கம் தேவை.

விடுதலை வேண்டும் முசுலிம் சிறைப்பட்டோர் 37 பேரில் 21 பேர் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தண்டிக்கப்பட்டவர்கள் என்பதைத் தமிழ்நாடு இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு தமிழ்நாடு முதலமைச்சருக்கு எழுதிய 29.11.2011 மடல் சுட்டிக் காட்டுகிறது. எஞ்சிய 16 பேர் மீது ”பய்ங்கரவாத”க் குற்றச்சாட்டு இருப்பதால் இவர்களின் விடுதலைக்கு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 161 உதவாது என்பதுதான் சட்டநிலை. இதன் பொருள் இவர்களை விடுதலையே செய்ய முடியாது என்பதன்று. அதற்குக் குற்ற நடைமுறைச் சட்டத்தின் 432 - 435 பிரிவுகளைப் பயன்படுத்த வேண்டும். அமைச்சரவையில் முடிவெடுத்து அதற்கு இந்திய அரசின் கலந்தாய்வு கோரி எழுத வேண்டும். இந்திய அரசின் இசைவு பெறுவதற்கான முயற்சிகளைத் தொடங்க வேண்டும்,

முதலில் குறிப்பிட்ட 21 பேரைப் பொறுத்த வரை அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 161 வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். எழுவர் விடுதலைக்குச் செய்தது போல் அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி ஆளுநருக்கு அனுப்பி அவரின் ஒப்பம் பெற்று 21 பேரையும் விடுதலை செய்ய முடியும்.

தமிழக அரசு அமைச்சரவைத் தீர்மானங்கள் இயற்றியவுடனே முஸ்லிம் சிறைப்பட்டோருக்குக் கதவு திறந்து விடும் என்ற மயக்கம் நமக்கில்லை. ஆனால் இவ்வளவு காலமாகியும் தமிழக அரசு முதலடி கூட எடுத்து வைக்கவில்லை என்பது மட்டுமல்ல, விடுதலைக் கோரிக்கையை முன்வைக்கிறவர்கள் அரசிடம் இந்த முதலடியைக் கூட கோராமலிருப்பதும் கூட நாம் கவலையோடு குறித்துக் கொள்ள வேண்டிய செய்திகள்.

# மைசூர்ப் புலி திப்பு சுல்தான்

---//// கவிதா சோலையப்பன்////----



மைசூர்ப் புலி என்று போற்றப்படும் திப்பு சுல்தான்1750 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் தேவனஹள்ளி என்ற ஊரில் ஹைதர் அலிக்கும் ,பாக்ர்-உன்-நிசா அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார். ஹைதர் அலியும் இந்திய வரலாற்றில் முக்கிய இடம்




பெற்றவர்.

இந்த ஹைதர் அலிதான் வேலு நாச்சியாருக்குப் படை கொடுத்து ஆங்கிலேயரை வெல்ல உதவியவர். ஹைதர் அலி எளிய குதிரைவீரராக இருந்து ,படிப்படியாக உயர்ந்து ,பிறகு மைசூர் அரசையே ஆளும் மன்னராக உயர்ந்தவர். இரண்டாம் மைசூர் போரில்

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டவர். பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி வாகை சூடியவர்கள் ஒருசிலரே. அவர்களுள் தந்தை ஹைதர் அலியும் மகன் திப்பு சுல்தானும் அடங்குவர்.

1782ஆம் ஆண்டு தந்தை ஹைதர் அலியின் மரணத்திற்குப் பிறகு ,தனது32 ஆம் வயதில் மன்னராக அரியணை ஏறினார் திப்பு. 1782 முதல் 1799 வரை மைசூர் பகுதியை ஆட்சி செய்தார். ஆட்சித் தலைநகரமாக சீரங்கப்பட்டினம் இருந்தது. மைசூரின் மன்னராகப் பொறுப்பேற்ற திப்பு சுல்தான் தனக்குரிய அடையாளமாகப் புலிச் சின்னம் பொறித்த கொடியைப் பயன்படுத்தினார். ஹைதர் அலியைப் போலவே திப்புவும் ஆங்கிலேயருக்கு சிம்மசொப்பனமாக விளங்கி , கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரத்தை உடைத்தெறியும் அளவுக்குப் பெரும் சவாலாக இருந்தார்.



திப்பு என்ற உருதுச் சொல்லுக்குப் புலி என்று பொருள். அவர் தனது பெயருக்கு ஏற்ப ஒரு மாவீரனாக வாழ்ந்து காட்டினார்." ஆடுகளைப் போல அடிமைகளாகப் பல ஆண்டுகள் பிழைப்பதை விட ,புலியைப் போல இரண்டு நாட்கள் வாழ்ந்து மடியலாம்" என முழங்கி மக்களிடையே விடுதலை எழுச்சியை உருவாக்கினார். இன்று பலரும் புவிசார் அரசியல் பற்றிப் பேசி வருகிறார்கள். ஆனால் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பிலிருந்து இந்தியா விடுதலை பெற வேண்டி பிரெஞ்சு மாவீரன் நெப்போலியனுடன் இணைந்து செயல்பட முயற்சிகள் மேற்கொண்டார் திப்பு.



[லோப்ஸ் தீவில் உள்ள நாசா வரவேற்பறையில் உள்ள ஓவியம் ஆங்கிலேய இராணுவத்திற்கு எதிராக திப்பு சுல்தான் ராக்கெட்டுகள் ஏவியதைச் சித்திரிக்கிறது[

.

கிழக்கிந்தியக் கம்பெனியார் அஞ்சும் அளவிற்கு திப்பு சுல்தான் மிகப் பெரிய இராணுவப் படையினைக் கொண்டிருந்தார். வெடிமருந்து கொண்டு தயாரிக்கப்படும் ராக்கெட் தொழில்நுட்பத்தை உருவாக்கியவர்கள் சீனர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனாலும் ,


இரும்பு கொண்டு செய்யப்படும் சக்தி வாய்ந்த ராக்கெட் தொழில்நுட்பத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர் திப்பு சுல்தான் எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். பின்னாளில் இவரைப் பின்பற்றியே ஆங்கிலேயர் ராக்கெட் செய்தனர். இலண்டன் அருகில் ஊல்ரிச் எனும் ஊரில் உள்ள அருங்காட்சியகத்தில் திப்பு சுல்தான் பயன்படுத்திய ராக்கெட்டுகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இதுபோல ,நாசாவின் வாலோபஸ் விமானதள அலுவலக அறையில் ஆங்கிலேயச் சிப்பாய்களை திப்புவின் ராக்கெட்கள் தாக்கும் ஓவியம் ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.2015 ஆம் ஆண்டு இவர் பயன்படுத்திய 30 ஆயுதங்கள் இலண்டனில் உள்ள போன்ஹாம்ஸ் ஏல நிறுவனத்தில் ஏலம் விடப்பட்டன. இந்த ஏலத்தில் ஆறு மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங் கிடைத்ததாம்.


திப்பு இசுலாமிய மதத்தில் முழு ஈடுபாடு கொண்டவராக இருந்தாலும் ,அவருடைய ஆட்சியில் இந்துக்கள் உள்ளிட்ட பிற மதத்தவரும் சுதந்திரமாகச் செயல்பட்டனர். மக்களிடையே அமைதியை மட்டும் விரும்பிய அவர் ,சகோதரத்துவத்தை இறுதி வரை கடைப்பிடித்தார். அவரது ஆட்சியில் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர் வழிபாட்டுத் தலங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. திப்பு சுல்தான் சமய வேறுபாடுகள் களைந்தவராய் ,தனது அமைச்சரவையின் முக்கிய பொறுப்புகளில் பொருளாளராக கிருஷ்ணா ராவ் ,அஞ்சல் மற்றும் காவல்துறை அமைச்சராக சாமைய்யா ஐயங்கார் ,வருவாய்த்துறை அமைச்சராக பூர்ணையா – ஆகியோரை அமர்த்தியிருந்தார்.

முழுமையான மதுவிலக்கைக் கொண்டுவர ,நாம் இன்றளவும் எத்தனையோ போராட்டங்கள் நடத்தித் தோல்வியையே கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் ,திப்புவோ அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்திருந்தார். திப்பு சுல்தான் ஆட்சியில் ,பெண்களுக்கு மரியாதை கொடுத்தது மட்டுமல்லாமல் ,விலைமாதர் முறையையும் ஒழித்திருந்தார். திருவிதாங்கூர் பகுதியில் குறிப்பிட்ட சமூகப் பெண்கள் மேலாடை அணியத் தடை விதிக்கப்பட்ட நிலையில் ,இக்கொடுமையை எதிர்த்து ஆளுநருக்குக் கடிதம் எழுதினார்.

இன்று வரை விவசாயிகளுக்கு ஆதவரான மற்றும் எதிரான வேளாண் சட்டங்கள் காலந்தோறும் கலந்தே காணப்பட்டாலும் ,திப்புவின் ஆட்சி காலத்தில் விவசாயத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு மைசூர் மாகாணம் தன்னிறைவு பெற்றிருந்தது. சரியான நீர்ப்பாசன வசதி ,உயர் தர விதைகள் பயன்பாடு ,வேளாண்மை செய்யும் உழவர்களுக்கு நிலவுடைமை என வேளாண் புரட்சி செய்தவர் திப்பு.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014




1766 முதல் 1799 வரை ஆங்கிலேயருக்கு எதிராக மொத்தம் நான்கு மைசூர்ப் போர்கள் நடைபெற்றன. இதில் இரண்டு ,மூன்று மற்றும் நான்காம் மைசூர்ப் போர்கள் திப்பு தலைமையில் நடைபெற்றன. இரண்டாம் போரில் திப்பு வெற்றி பெற்றார். அதன் பிறகு1789 ஆம் ஆண்டு திப்பு சுல்தான் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக நடைபெற்ற மூன்றாம் மைசூர்ப் போரில் மைசூருக்கு எதிரான கூட்டணியில் மராட்டியப் பேரரசும் ஐதராபாத் நிஜாமும் இடம் பெற்றிருந்தனர். இப்போரில் மைசூர் அரசு தோல்வியடைந்தது. சீரங்கப்பட்டினம் அமைதி ஒப்பந்தத்தின்படி தனது ஆட்சியின் கீழிருந்த பகுதிகளில் கிட்டத்தட்ட பாதியினைத் தனது எதிரிகளிடம் திப்பு சுல்தான் ஒப்படைக்க நேர்ந்தது. மேலும் ,திப்பு சுல்தானை தோற்கடித்த காரன் வாலீஸ் அதே சீரங்கப்பட்டின உடன்படிக்கையின் படி ரூபாய் மூன்று கோடி பணத்திற்காகத் திப்புவின் பத்து வயது அப்துல் காலிக் சுல்தான் மற்றும் எட்டு வயது மொய்சுதீன் சுல்தான் ஆகிய இரு மகன்களையும் பணயமாகப் பிடித்து வைத்துக் கொண்டான். காரன் வாலீஸ் நினைவாக வடிக்கப்பட்ட சிலை ஒன்றில் சரணடைந்த திப்புவின் மகன்களை காரன் வாலீஸ் தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கும் காட்சி சித்திரிக்கப்பட்டு சென்னையில் பொது இடத்தில் வைக்கப்பட்டது. துரோகத்தின் சின்னமாகக் கருதப்பட்ட இச்சிலை ,பொதுமக்களின் எதிர்ப்பால் , அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டு ,சென்னை ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் இப்போது

வைக்கப்பட்டுள்ளது.





இரண்டாம் ஆங்கிலேய-மைசூர் போரில் கைது செய்த ஆங்கிலேயப் படைவீரர்களை விடுவிக்க திப்பு மறுத்து வந்தார். மேலும் ,கிழக்கிந்தியக் கம்பெனி விரிவாக்கத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வந்த திப்புவை போரில் வீழ்த்த முடியாது என்றெண்ணிய ஆங்கிலேயர்கள் திப்புவின் அமைச்சர்களை விலைபேசி ,சூழ்ச்சி செய்தனர்.

இதனைத் தொடர்ந்து1799 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் திடீரென திப்புவின் சீரங்கப்பட்டினக் கோட்டை தாக்கப்பட்டது. இதுவே இறுதியான நான்காம் மைசூர் போர். திப்புவின் நயவஞ்சக அமைச்சர்களால் கோட்டையின் தண்ணீர்க் கதவு ஆங்கிலேயர்களுக்குத் திறந்து விடப்பட்டது. உணவருந்திக் கொண்டிருந்த திப்பு ,தப்பிச் செல்ல எத்தனையோ வழிகள் இருந்தும் எந்தக் கவச ஆடைகளும் அணியாமல் வீரர்களோடு வீரராய்த் துணிச்சலுடன் போரிட்டார். முடிவில் சூழ்ச்சி வென்றது1799 ;ஆம் ஆண்டு மே4 ஆம் நாள் குண்டுக் காயங்களால் வீரச்சாவடைந்தார் திப்பு.

போரின் முடிவில் திப்பு சுல்தானின் மகன் பதே அலி நாடுகடத்தப்பட்டார். இப்போரில் திப்பு சுல்தானுக்கு மறைமுகமாக உதவிய ஆற்காடு நவாப் உம்தத் உல் உம்ராவை ஆங்கிலேயர்கள் பின்னர் நஞ்சூட்டிக் கொன்றதாகக் கருதப்படுகிறது. திப்புவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் இன்றும் சீரங்கப்பட்டினத்தில் இருக்கிறது.

திப்பு இறந்த பிறகு அவரது கோட்டையிலிருந்து ஆங்கிலேயர்கள் கொள்ளையடித்த பொன் , பொருள் ,ஆயுதங்கள் ,கலைப் பொருட்கள் ,ஆடை ,அணிகலன்கள் அனைத்தும் இங்கிலாந்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இப்பொருள்களில் சிலவற்றை இலண்டன் அருங்காட்சியகங்களில் வைத்துள்ளனர். சில அவ்வப்பொழுது ஏலம் விடப்பட்டு வருகின்றன. திப்புவின் அறிவியல் தொழில்நுட்ப அறிவிற்குச் சான்றாக இருந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவது திப்பு தனது இசைக்கருவிகள் கொண்ட அறையில் வைத்திருந்த புலிப் பொம்மை. இது புலி ஒன்று ஆங்கிலேயர் ஒருவரைக் கடிப்பதும் ,அப்பொழுது புலி உறுமுவதும் ,அந்த மனிதன் அலறும் சத்தமும் கொண்ட பொம்மையாகும். இப்போது இப்பொம்மை இலண்டன் விக்டோரியா ஆல்பர்ட் அருங்காட்சியகத்தில் உள்ளது.

முன்னாள் இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் ,மதுபானத் தொழிலிலும் வானூர்தித் தொழிலிலும் பேர்போனவருமான விஜய் மல்லையா2004 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற ஏலத்தில் திப்பு சுல்தானின் வாளை 175,000 பவுண்டுகள் கொடுத்து வாங்கினார் என்று ஒரு தகவல். அண்மையில் ஏலம் விடப்பட்ட ஒன்றரை மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள தங்கத்தாலான புலி உருவம் கொண்ட திப்புவின் மகுடத்தை நாட்டை விட்டு வெளியே எடுத்துச் செல்ல இங்கிலாந்து அரசு தடை விதித்துள்ள செய்தியும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வீரமிக்க மாவீரனின் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூர்ந்து அடுத்த தலைமுறைக்கும் எடுத்துரைப்போம்.

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**ஏ.எம். தியாக்கோவ்:**

# இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் (2)

[1939-1949 காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிப்போக்குகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்ட சோவியத்து இந்தியவியலர்களில் முதன்மையானவர் ஏ.எம். தியாக்கோவ். அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 1952இல் சோவியத்து (குமுகியக் குடியரசுகள்) ஒன்றியத்தின் (USSR) கீழையியல் ஆய்வுக் கழகத்தால் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒன்றுதான் "இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் பற்றி" தியாக்கோவ் எழுதிய கட்டுரை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலத்தில் இந்தியாவின் தேசிய இனச் சிக்கல் குறித்து அவர் செய்த முகன்மையான ஆய்வின் முடிவுகள் இந்தக் கட்டுரையில் இடம்பெறுகின்றன. தியாக்கோவின் கருத்துரைகளை இந்தியப் பொதுமை இயக்கம் பொருட்படுத்தாமல் விட்டு விட்டது. இப்போதும் கூட இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இனச்சிக்கலைப் புரிந்து கொள்ள தியாக்கோவின் பார்வைகள் துணைசெய்யக் கூடியவை என்பதால் அவரது கட்டுரையை இங்கு தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம். இந்தக் கட்டுரையின் முதல் பகுதியை 2021 நவம்பர் இதழில் வெளியிட்டோம். இதோ அதன் தொடர்ச்சி:]

இந்திய அரசமைப்புப் பேரவை பழைய காங்கிரசு வேலைத்திட்டத்தை மறுதலித்ததோடு நில்லாமல், அமெரிக்க அரசமைப்பை இந்திய அரசமைப்புக்கு உருக்காட்டாக (மாடல்) ஏற்று, குடியரசுத் தலைவருக்குச் சிறப்பதிகாரங்களும் மாநில ஆளுநர்களை நீக்கும் உரிமையும் வழங்கியது, இவ்வாறு இந்திய மாநிலங்களின் தன்னாட்சியை ஒன்றுமில்லாமற் செய்தது.

இந்தியப் பெருநிறுவனங்களும், முற்றுரிமைக் குழுமங்களும் வங்கிகளும் முகமையாக குசராத்தி, மார்வாரி மூலமுதலுக்குச் சொந்தமானவை, இந்தியப் பெருமுதலாளர்கள் தேசிய இன வகையில் குசராத்திகளும் மார்வாரிகளும் ஆவர் என்ற உண்மையை வைத்து, இந்தக் கூறுகள் குசராத்தி, மார்வாரி தேசியத்தின் ஏந்திகள் என்ற முடிவுக்கு வந்து விடலாகாது. மாறாக, இவர்களுக்கு குசராத்திகள், மார்வாரிகளின் தேசிய நலனில் அக்கறை இல்லை. 1917ஆம்

ஆண்டிலேயே, குசராத்திய முதலாளர்கள், அறிவாளர்கள், நிலக்கிழார்கள் ஆகியாரின் பேராளர்கள் கலந்து கொண்ட குசராத் கல்வி மாநாட்டில் உரையாற்றிய காந்தியார் குசராத்தின் தேசியப் பண்பாட்டிலும் குசராத்தி மொழியிலும் அவர்கள் அக்கறையின்றி இருப்பதைக் கண்டித்தார், தெலுங்கர்கள் தமது தேசியப் பண்பாட்டில் கொண்டுள்ள பற்றினை அவர் எடுத்துக்காட்டினார். காந்தியாரே கூட இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக்கப் பரப்புரை செய்கிறவர்தாம் என்பதால் அவரின் இந்த உரை குறிப்பாகக் கருத்துக்குரியதாகும். அவருக்கே கூட குசராத்திய முதலாளர்கள் 1917இலேயே தம் சொந்த மக்களின் எதிர்காலம் தொடர்பாகக் காட்டிய பாராமுகமும் செயலின்மையும் படுமோசம் என்றும், அது வெகுமக்களிடையே அவர்களது செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்வதில் குறுக்கிடக் கூடியது என்றும் தோன்றிற்று. மார்வாரி முதலாளர்கள் இராஜஸ்தானத்து மக்களின் நலன்கள் தொடர்பான பாராமுகத்தில் இன்னுங்கூட மோசமாக நடந்து கொண்டனர். இராசபுதனத்து இளவரசர்களோடும் ஜாகீர்தார்களோடும் மிக நெருக்கமாகப் பிணைந்திருந்த அவர்களுக்குத் தம் மக்களின் நலன்களில் கிஞ்சிற்றும் அக்கறை இல்லை. மார்வாரி முதலாளர்கள், இராஜஸ்தானத்தின் பல்வேறு திசைமொழிகளிலும், மார்வாரி மொழியிலேயே கூட, இலக்கியத்துக்குப் புத்துயிரளிக்க முயற்சியேதும் செய்தார்களில்லை.

பெருமுதல், குறிப்பாக முற்றுரிமை மூலமுதல் இயல்பிலேயே இனநலங்கருதாத ஒன்று. குசராத்தையும் மார்வாரையும் சேர்ந்த முதலாளர்கள் தமது உள்நாட்டு அரசியலிலும் பன்னாட்டு அரசியலிலும் இனநலங்கருதாமைக்கு எடுத்துகாட்டுகளாக உள்ளனர்.

குசராத்திகளும் மார்வாரிகளும் இந்திய மக்களினங்களில் நிலக்கிழாரியத்தின் எச்சங்களாலும், நூற்றுக்கணக்கான குறுநில சமஸ்தானங்களிடையே ஆள்புலம் கிழாரிய வழியில் பிரிந்து கிடப்பதாலும் கூடுதலாக அல்லலுற்றுக் கிடப்போரில் அடங்குவர். இப்படியான சூழல் அம்மக்களின் பண்பாட்டியல், பொருளியல் வளர்ச்சிக்கு மோசமான பெருந்தடையாக இருந்து வருகிறது. பொதுவாக குசராத் இந்தியாவில் பொருளியல் முன்னேற்றம் கண்ட வட்டாரங்களில் ஒன்று என்றால், இராஜஸ்தானம், குறிப்பாக மார்வார் மிகமிகப் பின்தங்கியவற்றில் ஒன்றாகும். குசராத்தி, மார்வாரிப் பெருமுதலாளர்களின் நலன்கள் குசராத்துக்கும் மார்வாருக்கும் வெளியே இருக்கும் தொழிற்புலங்களில் கிடக்கின்றன. பம்பாய் குசராத்திய மூலமுதலின் தளமாகும், மார்வாரி மூலமுதல் இனநலங்கருதாமை என்ற

சொல்லின் முழுப்பொருளில் இனநலங்கருதாத ஒன்றாகும். இந்தியாவின் உள்நாட்டு அங்காடியில் தங்கள் நிலைகளை வலுவாக்கிக் கொள்வதில் கவனமாய் இருக்கும் குசராத்தி, மார்வாரிப் பெரு முதலாளர்கள், ஏனைய தேசங்களின் பெருமுதலாளர் போலவே, பெரும (அதிகபட்ச) மையப்படுத்தல்-கொள்கையின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். இந்தியானது தொழில், வணிகத் துறையில் ஏற்கெனவே ஓரளவுக்குப் பொதுவான இந்திய மொழி ஆகி விட்டதால் அம்மொழிக்கு அவர்கள் ஆதரவாக உள்ளனர். இந்தியாவின் தனித்தனி தேசிய இனங்களின் வளர்ச்சியில் அவர்களுக்கு அக்கறையில்லை என்பது மட்டுமன்று, தேசிய மொழிகளின் வளர்ச்சியை எதிர்க்கிறார்கள், மாறாக, வட்டாரத் தன்னாட்சியையும், இன்னுங்கூட இந்திய மக்களினங்களின் தன்தீர்வுரிமையையும் எதிர்க்கிறார்கள். பஞ்சாபிகள், வங்காளிகள் ஆகிய மக்களினங்களின் எதிர்காலமும் வளர்ச்சியும் இந்த முதலாளர் குழுவுக்கு அறவே அயலானவை என்பதால், குறிப்பாக அவர்கள் பஞ்சாபும் வங்காளமும் பிரிக்கப்பட்டதை மிக எளிதில் ஏற்றுக்கொண்டார்கள்.

துப்புரவான 'ரொக்கப்பணப் பேராளர்கள்' என்பதாலும், இந்தியாவில் ஒரு புரட்சி நடந்தால் தவிர்க்கவியலாமல் தாங்கள் காணாமற்போய் விடுவோம் என்பதால் அப்புரட்சி கண்டு வேறெவரை விடவும் அச்சப்படுகிறவர்கள் என்பதாலும், அவர்கள் பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் பன்னாட்டு முற்றுரிமைக் குழுக்களுடனும் நெருக்கமான உறவுகளை மிகத் தீவிரமாக ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர். இந்தப் பொருளில் அவர்களுக்கும் நான்கு சீனக் குடும்பக் கும்பலுடன் கூடிய சீனத்து 'அதிகார வர்க்க முதலுக்கும்' பொதுவாக இருப்பது ஏராளம். அயல்முதலை இந்தியாவுக்குள் அழைக்க வேண்டும் என்றும், இந்தியாவைப் பொதுமைக்கு எதிராகப் போராடுவதற்கான தளமாக மாற்ற வேண்டும் என்றும், குடியாட்சிய இயக்கங்கள் அனைத்தையும் அடக்கியொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். முற்றுரிமைக் குழுக்களின் பேராளர்கள் என்ற முறையில், பிற்போக்கான அரசியல் சூழலையும், நிலக்கிழாரியத்தின் எச்சங்களையும் வலுவாக்குவதில் அக்கறை கொண்டுள்ளனர்.

இந்திய முதலாளர்களது இந்தக் குறிப்பான குழுவின் நலன்களை எடுத்தியம்பிடும் தேசியக் காங்கிரசு ஆசியாவில் இந்தியத் தலைமைப் பாத்திரம் என்னும் தேசியவெறிக் கருத்தை உருட்டிக் கொண்டிருக்கிறது, ஆசியாவில் ஜப்பானிய வல்லரசியத்தினது வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை இந்தியா எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைப் பரப்பி

வரும் அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகிய அரசுகளின் குடைக்கீழ் ஒரு பன்னாட்டுக் கூட்டமைப்பைத் தோற்றுவிப்பதற்காகப் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் தேசங்களின் இறைமைக்கான, குறிப்பாக இந்தியாவின் இறைமைக்கான போராட்டத்தை மறுதலிக்கிறது.

இந்திய முற்றுரிமையாளர்கள், நிலக்கிழார்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் ஆட்சியாகிய இந்திய ஒன்றிய ஆட்சியானது மொழிவழி மாநிலங்கள் அமைப்பதை மறுதலித்திருப்பது மட்டுமன்று, இந்தியாவின் மொழிகளையும், ஆகவே தேசிய இனங்களையும் பாகுபடுத்தும் கொள்கையையும் தொடங்கியிருக்கிறது. ஒன்றுபட்ட பீகார் மாநிலத்தின் செய்தியேடுகளில், இந்தியாவெங்கும் இந்து மகாசபாவின் வெளியீடுகளில் இந்தி மொழி கட்டாய அரச மொழியாகப் பரப்பப்படுகிறது. முன்பே, 1948ஆம் ஆண்டிலேயே, சட்டப்பேரவையில் அரசமைப்பு பற்றிய விவாதம் தொடர்பாக, இந்தியையும் ஆங்கிலத்தையும் இந்தியாவின் அரச மொழிகளாக அறிவிக்கும் வரைவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது; விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே மாநிலங்களின் பேராளர்கள் தத்தமது தாய்மொழியில் பேச அனுமதியுண்டு. இந்த வரைவுச் சட்டம் இந்தி பேச்சுமொழியாகவோ இலக்கிய மொழியாகவோ இல்லாத மாநிலங்களின் காங்கிரசு வெளியீடுகளில் கூட கோபத்தை வரவழைத்துள்ளது. 'கல்கத்தா ரெவ்யூ' என்ற ஏடு இந்த வரைவுச் சட்டத்தைக் கடுமையாகக் குறைகூறியதோடு, இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளையும் நிகர் என அறிவிக்கக் கோரியது. வங்காளத் தேசிய முதலாளர் இந்த வரைவுக்கு இப்படித்தான் எதிர்வினை ஆற்றினர். அச்சமுற்றுப் பின் வங்கப் பிரிவினைக்கு இணங்கிய வங்காளத் தேசிய முதலாளர்கள் மீண்டெழுந்து, பீகாரில் வங்காளிகள் பெரும்பான்மையாக உள்ள வட்டாரங்களையும், பிகாரிகள் அல்லது ஒரியர்களுக்கு நெருக்கம் என்பதைக் காட்டிலும் வங்காளிகளுக்கே கூடுதல் நெருக்கமான சந்தால், முண்டா ஆகிய இனக்குழுக்களையும் கூட மேற்கு வங்காளத்தில் இணைக்கும் படி கோரத் தொடங்கினார்கள். வங்காளத் தேசியர்கள் வங்காளிகள் மிகுதியாக உள்ள மாவட்டங்களை (கச்சார், லுஷாய், மணிப்பூர், திரிபுரா) அசாமிலிருந்து மாற்றித் தர வேண்டும் என்பதும், இந்த மாவட்டங்களைக் கொண்டு பூர்வாஞ்சல் பிரதேசம் என்ற தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பதும் கூட வங்காளத் தேசியரின் கோரிக்கைகள் ஆகும்.

1942ஆம் ஆண்டு கோர்சவான், சராய்கேலா, மயூர்பஞ்ச், ஆகிய சமஸ்தானங்களில்

அவற்றை ஒரிசா மாநிலத்தில் சேர்ப்பதற்கு எதிராகக் கடும்போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டங்களைத் தலைமையேற்று நடத்திய 'ஆதிவாசி சங்கம்', அதாவது 'பழங்குடிகள் ஒன்றியம்' இந்த சமஸ்தானங்களை பீகாரில் சோட்டா நாகபுரி மாவட்டத்தில் சேர்க்கக் கோரியது.

இந்த சமஸ்தானங்களையும் சிங்பூம், பீர்பூம், சந்தால் பர்கானா, பூர்ணியா மாவட்டங்களையும் மேற்கு வங்காளத்தில் சேர்க்க வேண்டும் என வங்காளத் தேசியர்கள் கோரினர்.

குறிப்பாகத் தென்னிந்தியாவில் இந்திய ஆட்சியாளர்களின் தேசிய இனக் கொள்கைக்கு எதிராக வலுவான கிளர்ச்சிகள் வெடித்தன.

மொழிவழி மாநிலங்கள் எனப்பட்டவற்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை பெரிதும் மக்கள் ஆதரவு பெற்ற ஒன்று, பற்பல இந்தியத் தேசிய இனங்களின் முதலியக் (முதலாளித்துவக்) கூறுகளிடையே கூட பேராதரவு பெற்ற ஒன்று, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் தன் இறுதியான மறுப்பை வெளிப்படையாக அறிவிக்க இந்திய அரசு உடனே தீர்மானிக்கவில்லை. அது இந்த மறுப்பைத் தனக்கு எளிதாக்கிக் கொள்ளும் பொருட்டு நிர்வாகச் சீர்திருத்தங்களை அணியப்படுத்துவதற்கென்று சொல்லி 1948இல் ஒரு வினாப் பட்டியலை வழங்கியது.

மொழிவழி மாநிலங்கள் அமைப்பது பற்றிய வினாவிற்குத் தெளிவான எதிர்விடை கிடைப்பதை உறுதி செய்யத் தோதாக இந்த வினாப் பட்டியல் கட்டமைக்கப்பட்டது. சான்றாக, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய காங்கிரசு செல்வாக்கு மிக்க ('மொழிவழி') மாநிலங்களில் வழங்கப்பெற்ற வினாப் பட்டியலில், வெவ்வேறு பொருளியல் அமைப்புகளிடமும், முகமையாக குசராத்திகளும் மார்வாரிகளுமான தொழிலதிபர்களிடமும் கேட்கப்பட்ட வினா: இந்த மாநிலங்கள் பிரிந்து தனித்தனியானால் தமது நிதிநிலைகளைப் பற்றாக்குறையில் சிக்காமல் நேர்செய்ய முடியுமா? மாறாக, குசராத், தமிழ்நாடு ஆகிய காங்கிரசு செல்வாக்குள்ள மாநிலங்களில் மக்களிடையே கேட்கப்பட்ட வினா: ஆந்திரமும், கேரளமும், கர்நாடகமும், மகாராஷ்டிரமும் இந்த மாநிலங்களிலிருந்து பிரிக்கப்பட்டால் அவற்றின் (குசராத், தமிழ்நாடு ஆகியவற்றின்) மீது ஒரு நேர்நிறைத் தாக்கம் ஏற்படுமா? இப்படிச் செய்தால் அதன் தாக்கம் தொடர்பாக குசராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் முதலாளர்கள் எதிர்மறையாகவே

விடையளிப்பார்கள் என்றும் கருதப்பட்டது.

இந்தத் தந்திரங்கள் எப்படிப்பட்டவை என்று 'பீப்பிள்ஸ் ஏஜ்' எழுதியது: "ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற புதிய மொழிவழி மாநிலங்களைத் தோற்றுவிப்பது போட்டியாளர் தொகையை, அதாவது அந்தந்த மாவட்டங்களின் முதலாளர் தொகையைக் கூடுதலாக்குவதாகும் என்பது பெருமுதலாளர் வகுப்பின் பார்வை. போட்டியாளர்களான இம்முதலாளர்கள் அந்தந்தத் தேசிய வட்டாரங்களின் தொழில்துறையும் அங்காடிகளும் வளர்ச்சி பெற உந்துவார்கள். எனவேதான் பெருமுதலாளர் வகுப்பு குறிப்பிட்ட கோரிக்கையை நிறைவேற்ற விடாமல் குழிபறித்து வருகிறது.

"காங்கிரசுத் தலைவர்களும் முதலாளர்களும் இந்த மாவட்டங்களின் மக்களினங்களிடம் இன்னுங்கூட அச்சப்படுகிறார்கள். தனி மாநிலங்கள் அமைக்கப்பட்டு விட்டால் முற்போக்கான குடியாட்சியக் கூறுகளின் செல்வாக்கு கருதத்தக்க அளவில் வலுப்பெறும், எப்போதும் அவர்களை சமாளிக்க இயலாமற்போகும் என்று அச்சப்படுகிறார்கள்."

மேலும் அதே கட்டுரையில் 'பீப்பிள்ஸ் ஏஜ்', தேசிய இன அமைப்புகளின் முதலியத் தலைமை இந்த இயக்கத்தை காங்கிரசு வேலைத்திட்டத்தின் கோரிக்கைகளுக்குள் குறுக்க விரும்புகிறது என்றும், உந்தி முன்செல்ல விரும்பவில்லை என்றும் சுட்டிக்காட்டுகிறது. அது மேலும் கூறியது: 'ஆனால், இந்தத் தலைமையிடம் ஊசலாட்டங்களும் வாய்ப்பு வேட்டையும் (சந்தர்ப்பவாதமும்) இருந்தாலும், மொழிவழி மாநிலங்கள் எனப்படுகிறவற்றை அமைப்பதற்கான இயக்கத்தை ஆதரிக்க வேண்டும். 'தேசிய இனங்களின் நிகர்மை என்பது உண்மையான குடியாட்சிய இந்தியாவின் நிறுவகக் கொள்கைகளில் ஒன்று; அதை நோக்கிப் பாதையமைத்துச் செல்லும் எந்த இயக்கத்துக்கும் ஆதரவு தர வேண்டும்; இந்தத் திசையில் சரியான பாதையில் நடையிடும் வகையில் ஆதரிக்க வேண்டும். எனவேதான் ஆந்திரத்திலும் கர்நாடகத்திலும் மகாராஷ்டிரத்திலும் ஏனைய மொழிவழி அமைப்புகளிலும் தனித்தனி மாநிலங்கள் அமைப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ள மக்களினங்களின் கோரிக்கையை நாம் ஆதரிக்கிறோம்.'

இந்திய மக்களினங்களில் மிகப் பெரும்பான்மையின் கோரிக்கைகளைத் தன் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் கொள்கையென்று சொல்லி அவற்றுக்குக் குழிபறிக்கும் இந்திய அரசுக் கொள்கையை இந்தியப் பொதுமையர் (கம்யூனிஸ்டுகள்) கண்டிக்கின்றனர்:

'தன்தீர்வுக்கும் நிகர்மைக்குமான கோரிக்கையை எதிர்ப்பவர்களே, இந்தியாவில் தேசிய இனங்கள் இருப்பதை மறுதலிப்பவர்களே இந்திய ஒருமைப்பாட்டைப் படுமோசமாக அழிப்போரும் அதன் பகைவர்களும் ஆவார்கள். அவர்களே இந்திய மக்களினங்கள் சேர்ந்து வாழவும், நிகர்மையின் அடிப்படையில் சேர்ந்து வாழவும் முடியாமற்செய்கின்றார்கள். தன்தீர்வுரிமைக்கும், இந்தியாவின் மெய்யான ஒற்றுமைக்கும் மக்களினங்களின் அதிகாரத்தின்கீழ் மட்டுமே வகை செய்ய முடியும். பம்பாய், சென்னை நகரங்களின் எதிர்காலம் குறித்தும் கடும் விவாதங்கள் எழுந்தன. பம்பாய் மகாராஷ்டிர ஆள்புலத்தில் அமைந்திருப்பதும், மக்கள்தொகையில் பெரும்பாலார் மராத்தியராக இருப்பதும் தெரிந்த செய்திகள். தொழிலாளர்களிலும் எழுத்தர்களிலும் அறிவாளர்களிலும் பெரும்பான்மை மராத்தியரே. ஆனால் தொழிலதிபர்களிலும் வணிகர்களிலும் வங்கியரிலும் பெரும்பான்மை குசராத்திகளே. கைவினைஞர்களிலும், சிறு வணிகர்களிலும் அறிவாளர்களிலும் தொழிலாளர்களிலும் குசராத்திகள் கணிசமாக உள்ளனர்.

பம்பாயை மகாராஷ்டிரத்தில் சேர்க்க வேண்டும் என்று மகாராஷ்டிர காங்கிரசு அமைப்பு கோரியது. காங்கிரசுத் தலைமை அதனை -- பம்பாய் மாநகரம் என்று - ஒரு சிறப்பு மாநிலம் ஆக்கியது - அது மகாராஷ்டிரத்திலோ குசராத்திலோ ஒரு பகுதியாகாது. மொழிவழி மாநிலங்கள் அமைப்பது பற்றிய வினா முன்னுக்கு வந்த போது நாட்டிலேயே வலிமையும் செல்வாக்கும் மிக்க பம்பாய் காங்கிரசுக் கிளை பம்பாயை வேறு எந்த மாநிலத்திலும் சேர்க்காமல் விடுமை நகரமாக (free city) அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. இந்த அடிப்படைகள் மீது, குசராத்தி, பார்சி முதலாளர்கள் ஆதிக்கம் வகித்த பம்பாய்க் காங்கிரசுக் குழுவிற்கும் மகாராஷ்டிர காங்கிரசு அமைப்புக்கும் நடுவில் கடும் பூசல் வெடித்தது.

பம்பாய்த் தொழிலாளர்கள் பெரும்படியாக மரத்தியர்களே ஆதலால் இந்த விவாதத்தில் பொதுமையர் (கம்யூனிஸ்டுகள்) மராத்தியரின் பக்கம் நின்றனர். மேற்கூறிய 'பீப்பிள்ஸ் ஏஜ்' இதழ் இச்சிக்கல் தொடர்பாக எழுதியது: பம்பாய் மகாராஷ்டிரத்தின் பகுதியாதலால் மகாராஷ்டிரத்தில் பம்பாய் நகரத்தைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை நாமும் ஆதரிக்கிறோம். பம்பாயை ஒரு தன்னாட்சி மாநிலமாக்க வேண்டுமென்று முன்மொழியப்படுவதன் நோக்கம் குசராத்திய மற்றும் பிற முதலாளர்களை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதே. இந்த நியாயப்படி பார்த்தால் ஒருசில மார்வாரி முதலாளர்களுக்காக வேண்டி கல்கத்தாவைத் தன்னாட்சி மாநிலமாக்க வேண்டியிருக்கும். காங்கிரசுக் கட்சி

முதலாளர்களின் நலன்களுக்காக பம்பாய் மராத்தி மக்களை மராத்தியல்லாதாருக்கு எதிராக நிறுத்துகிறது.'

சென்னை (மதராஸ்) தொடர்பான சிக்கலையும் கூட இந்திய ஆட்சியாளர்கள் தென்னிந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் என்பவற்றை அமைப்பதில் ஒரு தடையாகக் காட்டி வந்தார்கள். சென்னை நகரம் தமிழர்களும் தெலுங்கர்களும் குடியிருக்கும் பகுதிகளின் எல்லையில் அமைந்துள்ளது. இரு சாராருமே சென்னை நகரத்தில் வசிக்கின்றனர். இந்த அடிப்படையில் தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய தன்னாட்சி மாநிலங்கள் அமைக்கப்படுவது தவிர்க்கவியலாமலே சென்னையை ஒரு தன்னாட்சி மாநிலம் அல்லது 'விடுமை நகரம்' ஆக்குவதில் போய் முடியும் என்று அரசு அறிவித்தது.

தென்னிந்தியாவில் தேசிய இன இயக்கம் குறிப்பாகவும் சிறப்பாகவும் ஐதராபாத்தின் எதிர்காலம் தொடர்பாகத் தீவிரமடைந்தது. இந்தியப் பிரிவினைக்கு முன்பே கூட இந்த சமஸ்தான அரசின் காங்கிரசு அமைப்பு --- ஆந்திர மாநாடு, மகாராஷ்டிர மாநாடு, கர்நாடக மாநாடு ஆகிய --- மூன்று தேசிய இன அமைப்புகளைக் கொண்டதாய் இருந்தது. சமஸ்தான அரசில் சீர்திருத்தங்கள் செய்ய காங்கிரசுத் தலைமை தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் அதன் உறுப்புகளான தேசிய இன அமைப்புகள் அந்தந்த வட்டாரங்களின் தன்னாட்சி நோக்கியும், இறுதி நோக்கில் அவ்வட்டாரங்கள் அதே தேசிய இனம் வாழும் மாநிலங்களில் சேர்க்கப்படுவது நோக்கியும் நகர்ந்து கொண்டிருந்தன. இதற்கு ஐதராபாத் சமஸ்தான அரசைக் கலைக்காமல் வாய்ப்பில்லை.

அமெரிக்கச் செய்தியாளர் அண்ட்ரூ ரோட் அனுப்பிய செய்திகளில் கண்டுள்ளபடி, இவ்வரசில் காங்கிரசைச் சேர்ந்த முன்னணி ஆளுமைகளில் ஒருவரான பத்மஜா நாயுடு, இந்த சமஸ்தான அரசை தேசிய இன வட்டாரங்களாகப் பிரிப்பதை இங்குள்ள காங்கிரஸ் கட்சி ஆதரிக்குமானால் நைசாமால் அதிகாரத்தில் நீடிக்க முடியாது என்று கூறினார். ஆனால் நேருவிடமிருந்து இயல்வுக்குறி (சமிக்ஞை) வருவதற்காக காங்கிரஸ் காத்திருந்ததாகக் கருதப்படுகிறது. இது ஒருபுறமிருக்க, இந்த சமஸ்தான அரசின் முதலாளர் வகுப்பின் ஆகப் பெரும் செல்வாக்குள்ள ஆகப் பெரும் பிரிவினர், நைசாம் அரசுத் தொழில்முனைவுகளோடும் கொள்முதல்களோடும் தொடர்புடைய இப்பிரிவினர் சமஸ்தான அரசு பிரிக்கப்படுவதை

விரும்பவில்லை. நேரு இந்தப் பிரிவினைக்கு இயல்வுக்குறி காட்டவே இல்லை என்பது நன்கு தெரிந்த செய்தி. ஏனென்றால் காங்கிரசாட்சி மொழிவழி மாநிலங்கள் அமைக்கும் கருத்தையே மறுதலித்தது. ஆனால் மொழிவழி மாநிலங்கள் அமைப்பதற்கான இயக்கம் நின்று போய் விட்டதென்று பொருளில்லை. 1948இல் இந்த இயக்கம் பரந்துபட்ட அளவில் விரிவடைந்து காங்கிரசின் ஒற்றுமைக்கே அச்சுறுத்தலாயிற்று. ஐதராபாத் ஆந்திர மாநாட்டை உறுப்பமைப்பாகக் கொண்ட ஆந்திர மகாசபை காங்கிரசுச் செல்வாக்குள்ள ஆந்திர மாகாணத்தில் பெருமளவு விரிவடைந்தது. ஆந்திர மகாசபையில் பொதுமையருக்கு வலுவான செல்வாக்கு இருந்தது. அது தெலங்கானாவில் நடந்த புரட்சிக் கலகத்தை ஆதரித்தது. இந்த அமைப்பு 1911இல் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் பண்பாட்டுக்கும் கல்விக்குமான கழகமாக இருந்தது. அதில் நிலக்கிழார்கள் முன்னணிப் பங்கு வகித்தார்கள். முதல் உலகப்போருக்குப் பிறகுதான், குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குச் சற்று முன்னர் இந்தியாவில் தேசிய இனங்களின் தன்தீர்வுக்கான இயக்கம் தீவிரமடைந்து பெருந்திரள் தன்மையைப் பெற்ற போது ஆந்திர மகாசபை இன்னுங்கூட குடியாட்சியத் தன்மை கொண்ட அமைப்பாக மாறலாயிற்று. சிறுமுதலியக் கூறுகள் அதில் தலைமைப் பங்கு வகிக்கலாயின. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அது பெரும்படியாக உழவர் அமைப்பாக மாறியது. பொதுமையரின் செல்வாக்கு வளர்ந்தது. ஆந்திரப் பிரதேசத்து இந்தியத் தேசிய காங்கிரசு குறுகிய முதலியக் கட்சியாகி, வெகுமக்களிடையே பெருமளவுக்குச் செல்வாக்கிழந்தது.

1945இல், அதாவது மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் காலத்தில் மகாராஷ்டிர மாநாடு என்ற பெயரிலான அமைப்பு நிறுவப்பட்டது. அதன் தலைவர் அவ்வளவாக அறியப்படாத ஒரு மராத்திய வழக்குரைஞர். ஆயின் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவதற்கு இந்திய அரசு முட்டுக்கட்டைகள் போடத் தொடங்கிய போது இந்தியாவின் மராத்தி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்றிணைப்பதைத் தன் முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்த மகாராஷ்டிர மாநாடு மராத்தியர்களிடையே தன் நிலையை வலுவாக்கிக் கொண்டது. 1948 முடிவில் ஐதராபாத்தை இந்திய ஆய்தப்படைகள் கைப்பற்றிய பின் இந்த அமைப்பு ஐதராபாத்தின் ஒரு பகுதியை ஒன்றிணைந்த மகாராஷ்டிர மாநிலத்தில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

1948 அக்டோபர் 16, 17 நாட்களில் மகாராஷ்டிர மாநாடு பம்பாயில் கூடி, மராத்திய

ஆள்புலங்கள் அனைத்தையும், அவை இந்திய ஒன்றியத்துக்குச் சொந்தமானவை என்றாலும், சமஸ்தானங்களின் பகுதிகள் என்றாலும், மகாராஷ்டிரத்தில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. காங்கிரசு உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்று, அதன் செல்வாக்கை வரம்புக்குட்படுத்தவும், குடியாட்சிய ஆற்றல்கள் அந்த அமைப்பில் நுழைவதை மேலும் கடினமாக்கவும் முயன்றார்கள். இதற்காக அவர்கள் 5 ரூபாய் நுழைவுக் கட்டணமும் 1 ரூபாய் ஆண்டுக் கட்டணமும் விதிக்க வேண்டும் என முன்மொழிந்தார்கள். மாநாடு இந்தக் கோரிக்கையை மறுதலித்து சமரசமாக 1 ரூபாய் நுழைவுக் கட்டணம் என்று தீர்மானித்தது.

மகாராஷ்டிர மாநாடு ஆந்திர மகாசபையை விடவும் கூடுதலான அளவுக்குப் பலபடித்தான அமைப்பாக விளங்கிற்று. சிறுமுதலாளர்கள், சிறுமுதலிய அறிவாளர்கள் மட்டுமல்லாமல், மராத்திய முதலாளர்களும் கூட, அதாவது பூனாவையும் பிற மகாராஷ்டிர நகரங்களையும் சேர்ந்த பலவிதமான சிறுமுதலாளர்களும் கூட அந்த அமைப்பில் இடம்பெற்றனர். பல சிக்கல்களில் இந்த அமைப்பு தேசியக் காங்கிரசை ஆதரித்த போதிலும் மொழிவழி மாநிலங்கள் அமைக்கும் சிக்கலில் காங்கிரசுத் தலைமை, இந்திய அரசு ஆகியவற்றின் கொள்கைக்கு இணக்கமற்ற எதிர்ப்பு நிலையெடுத்தது.

கேரளத்தில் காங்கிரசின் உள்ளூர் அமைப்புகள் திருவிதாங்கூர், கொச்சி குறுநில மன்னர்களோடு அணி சேர்ந்து கொண்டன. திருவிதாங்கூரையும் கொச்சியையும் ஒன்றிணைத்து 'கேரள ஒன்றியம்' என்ற சமஸ்தான அரசை அமைப்பதன் ஊடாகத் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் குறுநில அரசர்களின் வேணவாக்களை ஆதரித்தன.

கூடுதலான குடியாட்சியத் தன்மை கொண்ட பிரிவினர் காங்கிரசிலிருந்து உடைந்து சென்று கேரள சோசலிசக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கினர். இந்தக் கட்சி சமஸ்தான அரசைக் கலைத்து விட்டு, ஒன்றிணைந்த குடியாட்சியக் கேரளம் அமைக்க வேண்டும் என்ற பொதுமையரின் (கம்யூனிஸ்டுகளின்) கோரிக்கையை ஆதரித்தது. - மலையாள சமஸ்தான அரசுகள் மட்டுமல்லாமல், சென்னை மாநிலத்தின் மலையாள வட்டாரங்களும் இந்த ஒன்றிணைந்த கேரளத்தில் அடங்கும்.

தேசிய இன இயக்கம் தென்னிந்தியாவில் போல் வட இந்தியாவில் அவ்வளவு வலுவாக இல்லை. வங்காளிகளையும் குசராத்திகளையும் தவிர தென்னிந்தியாவில் போல் அவ்வளவாக முழுமை பெற்ற தேசங்கள் இல்லை என்ற உண்மையே பெருமளவுக்கு இதற்கான

விளக்கமாகிறது. குசராத்தில் பெருமுதலாளர் வகுப்பு மிகவும் வலுவாக உள்ளது. அதற்கு இந்திய அங்காடியைத் தன் கட்டுக்குள் கொண்டுவருவதில் இருக்கும் அக்கறையின் அளவுக்குத் தன் தேசத்தின் பண்பாட்டு வளர்ச்சி பற்றியோ அதன் எதிர்காலம் பற்றியோ அக்றை இல்லை. அதனால்தான் குசராத்தைத் தனி மாநிலமாக்கி, குசராத்திய ஆள்புலங்கள் அனைத்தையும் அதன் எல்லைக்குள் ஒன்றுசேர்க்கும் கோரிக்கையை அது ஆதரிக்கவில்லை. ஆனால் ஒன்றுபட்ட குசராத் அமைப்பதற்கான இயக்கம் இருந்து வரத்தான் செய்கிறது.

வங்காளம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பாகப் பிரிவினை செய்யப்பட்டது வங்காளத்தில் தேசிய இயக்கத்துக்குப் பேரடியாக விழுந்தது. முசுலிம்களுக்கும் இந்துக்களுக்கும் நடுவில் பிரித்தானியர் விதைத்த கெடுநம்பிக்கை இன்னும் குறைந்த பாடில்லை. எனவேதான் வங்காளத்தை இந்திய ஒன்றியத்துக்குள்ளோ பாகிஸ்தானுக்குள்ளோ ஒன்றிணைக்க எந்த இயக்கத்தாலும் கோரிக்கை வைக்க முடியவில்லை. ஆனால் ஒன்றிணைய வேண்டுமென்ற ஏக்கம் வங்காளத்தின் இந்தியப் பகுதியில் போலவே பாகிஸ்தான் பகுதியிலும் வலுவாக உள்ளது. சான்றாக, மேற்கு வங்காளத்தின் முன்னாள் முதலமைச்சர் ராய் அவர்களே கூட --- இவரை மார்வாரிகளின் செல்லப்பிள்ளை என்று வங்காளி ஏடுகள் குறிப்பிட்ட போதிலும் --- வங்காள மக்களுக்கும் இந்திய ஆட்சியாளர்களுக்கும் இடையில் சாறமான வேறுபாடுகள் இருப்பதாகவும், வங்காளி மக்கள் ஒன்றுசேர ஆவல்கொண்டிருப்பதாகவும் அறிவித்தார். முன்னதாக, பிரிவினைக்கு முன் வங்காளத்தின் முதலமைச்சராக இருந்த சுராவர்தி பாகிஸ்தான் எல்லைகளுக்குள் வங்காளம் ஒன்றுசேர்வதை ஆதரித்தார். இந்த அரசியலாரின் அறிவிப்புகள் வங்க ஒன்றிணைப்பைச் சாதிக்க வேண்டும் எனும் வங்காள மக்களின் வேணவாக்களை எதிரொலித்தன என்ற பொருளில் கருத்துக்குரியன.

தெலுங்கு மக்களின் தேசிய இயக்கம் பெருவீச்சுடன் நடைபெற்றதால், 1949 நவம்பரில் சென்னை மாநிலத்தின் 11 மாவட்டங்களைக் கொண்டு ஆந்திர மாநிலம் அமைப்பதற்கு உடன்படுவதாக இந்திய அரசு அறிவிக்க வேண்டியதாயிற்று. ஆனால் 1950இல் இந்த முடிவு செயலாக்கம் பெறவில்லை. புதிய அரசமைப்புச் சட்டத்தில் இந்த மாநிலம் பற்றிய குறிப்பே இல்லை.

(தொடரும்)

# விவசாயிகளின் வழியில் தொடர்வோம்

சமந்தா




ஓராண்டுக்கு மேல் விவசாயிகள் அயராது மேற்கொண்ட தொடர் போராட்டங்களால் மூன்று விவசாயச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்கள் போராட்டங்களைக் கைவிடவில்லை மின்சாரச் சட்டத் திருத்த மசோதா-2020 ஐ திரும்பப் பெற வேண்டும் ,அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை உறுதிசெய்யும் விதமாக சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் அறவழியில் போராட்டங்களைத் தொடர்கிறார்கள் .மின்சாரச் சட்டத் திருத்தம் ,மின்சார விநியோகத்தில் தனியார் நிறுவனங்களின் நுழைவை அனுமதிப்பதால் விவசாயிகளுக்கான மின்சார மானியம் ரத்து செய்யப்பட்டு அவர்கள் மீதான மின்சாரக் கட்டணச் சுமை பெரிதும் அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்பதால்தான் விவசாயிகள் அதைத் திரும்பப் பெறுமாறு கோருகின்றனர்.

நவீன தாராளமயச் சந்தையின் ஆதாரவாளர்கள் மூன்று விவசாயச் சட்டங்கள் திரும்பப்

பெறப்பட்டதைப் பின்னடைவாகவே காண்கின்றனர் .இதில் நிட்டி ஆயோக் உறுப்பினர் ரமேஷ் சந்த் ,ஷெட்காரி சங்கதனா என்ற மகாராஷ்ட்ர விவசாய சங்கத்தின் தலைவர் அனில் கன்வாட் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ரமேஷ் சந்த் கூறுகிறார் :குறைந்தபட்ச ஆதார விலையை விட சந்தை விலையின் மூலமே விவசாயிகள் இலாபகரமாக வருவாய் பெற முடியும் .குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டம் கொண்டு வரப்பட்டால் அது சந்தையை அழித்து விடும் என்றும் அது வர்த்தகத்தையே அரசு கைப்பற்றுவதற்குச் சமம் என்றும் ,விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் அரசின் வாக்குறுதியிலும் சில தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டம் கொண்டுவரப்பட்டால் அது நாட்டையே நொடிப்பு நிலைக்குத் தள்ளி விடும் ,நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என அனில் கன்வாட் கூறுகிறார்.

அரசுக் கொள்முதல் இல்லாமல் திறந்த சந்தை வர்த்தகத்தின் மூலம் விவசாயிகள் இலாபகரமாக வருவாய் பெற முடியுமென்றால் எதற்காக விவசாயிகள் கடனில் மூழ்கித் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் .ஏன் 700 விவசாயிகளின் உயிர் பறிக்கப்பட்ட பின்னும் விவசாயிகள் தங்கள் போராட்டத்தைத் தொடர்கிறார்கள் ?விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துப் பல வருடங்கள் ஆனபோதும் அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில் குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டம் எவ்வாறு அதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுவதாகக் கருதமுடியும் என்ற கேள்விகளுக்கு ரமேஷ் சந்த் ,அனில் கன்வாட் இருவரும் பதிலளிக்க வேண்டும் . “விவசாயச் சட்டத் திருத்தங்கள் தொடர்பான விவசாயிகளின் குறைகளைக் கேட்டு , பரிந்துரைகளை வழங்குவதற்காக "உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட குழுவில் இடம்பெற்றவர்தான் இந்த அனில் கன்வாட் .இந்த நான்கு பேர் குழுவில் இடம்பெற்ற மற்றவர்களும் நவீன தாராளமயச் சந்தையின் ஆதராளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது . விவசாயிகளின் கருத்துகளுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் அளிக்கப்படாத விதத்திலேயே இக்குழு அமைக்கப்பட்டது .அந்தக் குழு அளித்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை .இந்த நிலையில் குறைந்தபட்ச ஆதார விலை சார்ந்த பரிந்துரை அளிக்கவும் ஒரு குழு அமைக்கப்படும் எனப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார் .ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுவின் இலட்சணமே இப்படி இருக்கும்

போது புதிய குழு விவசாயிகளுக்கு ஆதரவான நிலை எடுக்குமா என்பதும் கேள்விக்குறியே . குறைந்தபட்ச ஆதார விலை குறித்து புதிதாகப் பரிந்துரை பெற வேண்டிய அவசியமே இல்லை . எல்லாம் தெளிவாக ஏற்கெனவே எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையின் பரிந்துரையில் அளிக்கப்பட்டுள்ளது .

உற்பத்திச் செலவை விட குறைந்தபட்சம் 1.5 மடங்கு அதிகமாக குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய அரசு முடிவு செய்துள்ளதாக நரேந்திர சிங் தோமர் குறிப்பிட்டுள்ளார் . ந.மோடி அரசு குறிப்பிடும் குறைந்தபட்ச ஆதார விலை என்பது விவசாயிகளால் கோரப்படும் குறைந்தபட்ச ஆதார விலையை விடக் குறைவாகவே உள்ளது.

விவசாயிகளால் கோரப்படும் குறைந்தபட்ச ஆதார விலை எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையிலான C2வைப் போல் 1.5 மடங்கு விலையையே குறிப்பிடுகிறது.

C2 விலை = A2 + FL + நில வாடகை ,மூலதனத்திற்கான வட்டி

A2 விலை -விதைகள் ,உரங்கள் ,பூச்சிக்கொல்லி ஆகிய இடுபொருட்கள் ,இயந்திரங்களுக்கான செலவு ,தொழிலாளர்களுக்கான கூலி ஆகியவற்றின் கூடுதலைக் குறிக்கிறது.

ந.மோடி அரசு குறிப்பிடும் குறைந்தபட்ச ஆதார விலை என்பது A2 + FL X 1.5. இதில் குத்தகைச் செலவு / நில வாடகை ,வட்டி ஆகியவை கணக்கில் கொள்ளப்படவில்லை என்பதால் விவசாயிகளின் வருவாய் குறையவே வழிவகுக்கிறது .விவசாயிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கவும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளைத் தற்காலிகமாகக் கிடப்பில் போடுவதற்கான ஏற்பாடாகத்தான் இந்த புதிய குழு அமைக்கப்படவுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு நிதி இல்லாமல் பல்வேறு மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 10,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது .இது மிகவும் போதாக்குறையானதே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருப்பதை விட 32,000 முதல் 50,000கோடி வரை கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் குடிமைச் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

2020 செப்டம்பரில் 11.13 லட்சம் கோடியாக இருந்த சிறு குறு நிறுவனங்களின் வங்கிக் கடன் அளவு 2021 செப்டம்பரில் 11 இலட்சம் கோடியாகக் குறைந்துள்ளது 2020 .ஆகஸ்ட் மாதத்தில் 54.6 விழுக்காடாகவும் ,ஜூலையில் 70.9 விழுக்காடாகவும் இருந்த நடுத்தர நிறுவனங்களுக்கான

வங்கிக் கடன் வளர்ச்சி விகிதம் 2021 செப்டம்பரில் 24.3 விழுக்காடாகச் சரிந்துள்ளது.

நிட்டி ஆயோக்' டிஜிட்டல் வங்கிகள் 'எனப்படும் புதிய நிதி நிறுவனங்களை அறிமுகப்படுத்துவதற்கான கட்டுரையை வெளியிட்டுள்ளது ,இது இந்தியாவின் சிறு ,குறு ,நடுத்தர நிறுவனங்களின் தற்போதைய கடன் இடைவெளியைக் குறைத்து அமைப்புசார் நிதியொழுங்குக்குள் கொண்டுவருவதை அடிப்படை நோக்கமாய்க் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சர்வதேச நிதிக் குழுவின் மதிப்பீட்டின்படி ,சிறு ,குறு ,நடுத்தரப் பிரிவில் மொத்தக் கடன் தேவை 37 இலட்சம் கோடி ரூபாய் .இதில் வங்கிகள் ,பிற நிதி நிறுவனங்களிடமிருந்து 10.9 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே கடன் பெறப்படுகிறது .சிறு ,குறு ,நடுத்தரப் பிரிவில் உள்ள மொத்தக் கடன் இடைவெளி ரூ. 25.8 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது .இதை டிஜிட்டல் வங்கிகள் மூலம் இந்த இடைவெளியை அடைக்க இயலும் என்று இந்த ஆய்வறிக்கை கூறுகிறது .தற்போதைய வணிக வங்கிகள் திறனற்ற முறையில் அதிக செலவினங்கள் கொண்டவையாக உள்ளன . டிஜிட்டல் வங்கிகள் ,நிர்வாகச் செலவுகள் குறைவு என்பதால் அவற்றைக் கொண்டு இந்தக் கடன் இடைவெளியைக் குறைக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது .தலைமை வங்கி பரிந்துரைக்கும் முன்னுரிமைக் கடன் பரிந்துரைகளே சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதுடன் அந்த முன்னுரிமைக் கடன் பிரிவும் நீர்த்துப் போக செய்யும் படி பல்வேறு புதிய துறைகள் சேர்க்கப்பட்டுள்ளன .வங்கி நிதியமைப்பை சீர்திருத்தம் செய்யாமல் வெறும் வடிவ மாற்றம் ,டிஜிட்டல் மாற்றம் மூலம் தீர்வு காண முடியும் என்பது ஜன்தன் அட்டைகள் பெறுவதன் மூலம் விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாகும் என்ற வெற்று வாக்குறுதியைப் போலத்தான் உள்ளது.

டிஜிட்டல் பரிமாற்றங்களால் நுகர்வோரின் கட்டணச் சுமை குறையும் எனக் கூறப்படுகிறது . ஆனால் மும்பை ஐஐடியின் ஆய்வறிக்கை ஒன்றில் ,ஏழைகளின் ஜன்தன் வங்கிக் கணக்கில் கடந்த2017 ஆம் ஆண்டு முதல்2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் பரிமாற்றக் கட்டணமாக ரூ. 254கோடியை' ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா 'அபகரித்திருப்பது தெரிய வந்துள்ளது 4 .டிஜிட்டல் பரிமாற்றங்களுக்கு மேல் செய்தால் ,ஒவ்வொரு பரிமாற்றத்துக்கும் இவ்வங்கி ரூ. 17.70கட்டணச் சுமையை விதித்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. பொதுத்துறை வங்கியே இவ்வாறு செயல்படும் போது எவ்வாறு எளிய மக்களால் நம்பகமான முறையில்

டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் ஈடுபட முடியும்.?

இங்குள்ள சிறு ,குறு ,நடுத்தர நிறுவனங்களுக்கு உரிய முறையில் கடனளிக்கப்படுகிறதா என்பது பற்றி எல்லாம் மத்திய நிதியமைச்சருக்குக் கவலை இல்லை .அவர் வாஷிங்டன் நிதி நிறுவனங்களை குஜராத் கிஃப்ட் நகருக்கு வரவேற்று இந்தியாவிலிருந்து நிதி-இலாபத்தைச் சுரண்டுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தலைமை வங்கியின் அறிக்கை21-2020 இல் மூலதனம் ,வருவாய் செலவுகள் முறையே 38.3 விழுக்காடு 6.3 ,விழுக்காடு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கிறது .ஆனால் மூலதனச் செலவினங்கள் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறையில்தான் அதிகமாகச் செய்யப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்புச் சொத்துகளைப் பணமாக்கி உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பாஜக அரசின் அதிசயத் திட்டத்தின் கீழ் பொதுச் சொத்து மேலாண்மைத் துறை (DIPAM) 600 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் (BSNL), மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MTNL) ஆகியவற்றின் சொத்துக்களை இணைய ஏலத்தளம் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.

மத்திய நிதியமைச்சர் பங்கஜ் சவுத்ரி ஒரு கேள்விக்கு எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் , பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மத்தியக் கலால் வரி வசூல்20-2019 ல் ரூ 1.78.லட்சம் கோடியிலிருந்து21-2020 இல் (ஏப்ரல்-மார்ச் (ரூ. 3.72லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ,மாநில அரசுகளின் ஆதரவைப் பெற்றால் , பெட்ரோல் ,டீசலை ஜிஎஸ்டியின் கீழ் கொண்டு வர நிச்சயம் முயற்சி எடுப்போம் எனக் கூறியுள்ளார் .இது குறித்து மாநில அரசுகளைக் கேட்டால் மத்திய அரசின் ஆதரவு வேண்டும் என கைகாட்டுகின்றன .மத்திய அரசோ மாநில அரசுகளை காட்டிக் கைவிரிக்கிறது .மாநில அரசுகளின் ஆதரவைப் பெற்ற பிறகா விவசாய சட்டத் திருத்தம் ,மின்சார சட்டத் திருத்தம் ,புதிய தேசியக் கல்விக் கொள்கை எல்லாம் கொண்டுவரப்பட்டது .?பெட்ரோல் ,டீசலை ஜி.எஸ்.டி அமைப்புக்குள் கொண்டுவருவதற்கான கூடுதல் பொறுப்பு அனைத்தையும் மையப்படுத்தும் மத்திய அரசிடமே உள்ளது என்பதால் ,அதற்கு மாநில அரசுகளின் ஒத்துழையாமைதான் காரணம் எனத் திசைதிருப்புவதன் மூலம் மத்திய அரசின் செயல்பாட்டிற்கு நியாயம் கற்பிக்க முடியாது .

கிரிப்டோ நாணயங்களின் மீதான ஊக முதலீடுகள் இந்தியாவில் வரம்பற்று அதிகரித்துள்ள நிலையில் கிரிப்டோ நாணயங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடரில் இயற்றப்படும் என அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

கோவிட் தொற்றுக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர்த் தேவைகளின் படி தங்கள் தொகுதிக்கான நிதியை திறன் வாய்ந்த முறையில் பயன்படுத்தி நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் உதவி செய்திருக்க முடியும் .ஆனால் 2020 ஏப்ரலிலிருந்து கோவிட் தொற்று நோயைக் காரணம் காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நிறுத்தப்பட்டது .அதன் நிதி இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதிக்கு மாற்றப்பட்டது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

<u>பணவீக்கம் :</u>

சென்ற ஆண்டு அக்டோபரில் 1.31 விழுக்காடாக இருந்த மொத்தவிலைப் பணவீக்கம் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 12.54 விழுக்காடாக உயர்ந்துள்ளது ,எரிபொருள் ,ஆற்றலின் விலைவாசி 37.18 விழுக்காடு உயர்ந்துள்ளது .உற்பத்திப் பொருட்களின் விலைவாசி 12.04 விழுக்காடு உயர்ந்துள்ளது .கனிம எண்ணெய்கள் ,அடிப்படை உலோகங்கள் ,உணவுப் பொருட்கள் , கச்சா பெட்ரோலியம் ,இயற்கை எரிவாயு ,வேதிப்பொருட்கள் ஆகியவற்றின் விலையுயர்வினால் பணவீக்கம் இந்தளவுக்கு உயர்ந்துள்ளது .நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைவிலைப் பணவீக்கத்தின் அளவு செப்டம்பர் மாதத்தில் 4.48 விழுக்காடு அதிகரித்துள்ளது ,உணவுப் பொருட்களின் விலைவாசி 0.85 விழுக்காடு அதிகரித்துள்ளது .காய்கறிகளின் விலைவாசி 19.43 விழுக்காடு குறைந்துள்ளது .பழங்களின் விலைவாசி 4.92 விழுக்காடு உயர்ந்துள்ளது .பருப்பு வகைகளின் விலைவாசி 5.42 விழுக்காடு அதிகரித்துள்ளது .முட்டை விலை 1.38 விழுக்காடு குறைந்துள்ளது .எண்ணெய் ,கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 33.50 விழுக்காடு அதிகரித்துள்ளது .மீன் ,இறைச்சியின் விலைவாசி 7.12 விழுக்காடு உயர்ந்துள்ளது .

ஆகஸ்ட் மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி ஆகஸ்ட் மாதத்தில் உற்பத்தி 3.1 விழுக்காடு உயர்ந்துள்ளது .முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை ,செய்பொருளாக்கத் துறை ,மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 0.9 ,2.7 ,8.6 விழுக்காடு உயர்ந்துள்ளது .முதன்மைப் பொருட்கள் ,மூலதனப் பொருட்கள் , இடைநிலைப் பொருட்கள் ,கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் முறையே 7.4 ,4.9 ,1.3 ,4.6 விழுக்காடு உயர்ந்துள்ளன .உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 0.5 விழுக்காடு குறைந்துள்ளது .நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 2.0 விழுக்காடு குறைந்துள்ளது.

அக்டோபரில் தொழில்துறை வளர்ச்சி:

இந்தியாவின் தொழில்துறை ,உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு அக்டோபரில் 7.5 விழுக்காடு அதிகரித்துள்ளது .சென்ற ஆண்டு அக்டோபர் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 14.6 விழுக்காடு அதிகரித்துள்ளது .கச்சா எண்ணெய் உற்பத்தி 2.2 விழுக்காடு குறைந்துள்ளது ,பெட்ரோலிய சுத்திகரிப்புப் பொருட்களின் உற்பத்தி 14.4 விழுக்காடு அதிகரித்துள்ளது .உர உற்பத்தி 0.04 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 25.8 விழுக்காடும் ,எஃகு உற்பத்தி 0.9 விழுக்காடும் ,சிமெண்ட் உற்பத்தி 14.5 விழுக்காடும் ,மின்சார உற்பத்தி 2.8 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

2021-22 (ஜூலை–செப்டம்பர்) இரண்டாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பீடு:

2021-2022 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில்) ஜூலை–செப்டம்பர்) இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு 35.73 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது 21-2020 , இரண்டாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்புடன் ஒப்பிடும் போது இது 8.4விழுக்காடு வளர்ச்சியாக மதிப்பிடப்பட்டுள்ளது .இரண்டாம் காலாண்டில் மதிப்புக் கூட்டலின் மதிப்பு 8.5 விழுக்காடு உயர்ந்துள்ளது .விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 4.5 விழுக்காடாகவும், சுரங்கத் தொழில்களின் வளர்ச்சி விகிதம் 15.4 விழுக்காடாகவும் ,உற்பத்தித் துறையின் வளர்ச்சி 5.5 விழுக்காடாகவும் ,மின்சாரம்,நீர் வழங்கல் ,பிற சேவைகளின் வளர்ச்சியானது 8.9 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளன .வர்த்தகம் ,போக்குவரத்து ,ஹோட்டல் , தகவல் தொடர்புத் துறைகளின் வளர்ச்சி 8.2 விழுக்காடாகவும் ,நிதி ,வீட்டுமனை ,தொழில் முறை

சேவைத் துறைகளின் வளர்ச்சி 7.8 விழுக்காடாகவும் ,பொது நிர்வாகம் ,பாதுகாப்புத் துறையின் வளர்ச்சி 5.8 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளன .மொத்தப் பொருளாக்க மதிப்பில் தனியார் நுகர்வுச் செலவினம் 54.5 விழுக்காடாகவும் ,அரசு நுகர்வுச் செலவினம் 10.1 விழுக்காடாகவும், மொத்த நிலைமூலதன உருவாக்கத்தின் மதிப்பு 32 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளது.

2021-22ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இந்தியாவின் மொத்தப் பொருளாக்க மதிப்பு 8.4 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது .பொருளாதாரம் கோவிட்-தொற்றுக்கு முந்தைய நிலையைத் தாண்டியுள்ளது என்று அதிகாரபூர்வத் தகவல்கள் காட்டுவதாகவும் ,நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்படும் என்றும் தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி .சுப்ரமணியன் தெரிவித்துள்ளார் .ஆனால் சென்ற நிதியாண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது தனியார் நுகர்வுச் செலவினம் 0.18 விழுக்காடு மட்டுமே அதிகரித்துள்ளது ,அரசு நுகர்வுச் செலவினம் அதே அளவில் பூஜ்ஜிய வளர்ச்சியில் உள்ளது .மொத்த நிலைமூலதன உருவாக்கத்தின் மதிப்பு 2.5 விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ளது 2021 .இரண்டாம் காலாண்டில் தனியார் ,அரசு நுகர்வுச் செலவிங்கள் கோவிட்டுக்கு முந்தைய அளவை விட முறையே 4 விழுக்காடு 17 ,விழுக்காடு குறைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வயதினருக்கான வேலையின்மை விகிதம் 2021 ஜனவரி -மார்ச் மாதங்களில் 9.3 விழுக்காடு உயர்ந்துள்ளது .இது முந்தைய ஆண்டின் இதே மாதத்தில் 9.1 விழுக்காடாக இருந்துள்ளது ,என தேசியப் புள்ளியியல் அலுவலகத்தின் (NSO) காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு காட்டுகிறது. நகர்ப்புறங்களில் பெண்களிடையே வேலையின்மை விகிதம் ஒரு வருடத்திற்கு முன்பு 10.6 விழுக்காடாக இருந்தது 2021 ஜனவரி-மார்ச் மாதங்களில் 11.8விழுக்காடாக உயர்ந்துள்ளது.

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின்) CMIE) தரவுகளின் படி ,இந்தியாவில் வேலையின்மை விகிதம் செப்டம்பரில் 6.86 விழுக்காடாக இருந்தது அக்டோபரில் 7.75 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

நிட்டி ஆயோக் தயாரித்த பலபரிமாண வறுமைக் குறியீட்டின் படி இந்தியாவில்-2015 2016க்கும்2020-2019 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் பலபரிமாண வறுமையின் அளவு குறைந்துள்ளதாக பிரதமர் அலுவலகம் கருத்துத் தெரிவித்துள்ளது .இந்த இதழில் இரண்டு மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட கட்டுரையில் ஏற்கெனவே கூறியுள்ளபடி நிட்டி ஆயோகால்

கணக்கிடப்படும் பலபரிமாண வறுமைக் குறியீட்டில் வறுமையின் அளவு குறைத்து மதிப்பிடப்படுகிறது .இந்தக் குறியீட்டிற்கு அடிப்படையான அளவீடுகளில் நான்கில் ஒன்று மட்டும் வருமானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது .இந்தக் குறியீடு நுகர்வுச் செலவினத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாததால் உண்மையான வறுமையின் அளவை வெளிக்காட்டுவதில்லை .தேசியக் குடும்பச் சுகாதார ஆய்வின் (NFHS) 2015-16 தரவுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட இக்கணக்கீட்டின் படி பீகார் மிகவும் ஏழ்மையான மாநிலமாக உள்ளது .பீகார் மாநிலத்தின் மக்கள்தொகையில் 51.91 விழுக்காட்டினர் பலபரிமாண ஏழ்மை நிலையில் உள்ளனர் அதைத் தொடர்ந்து ஜார்கண்ட்டில் 42.16 விழுக்காட்டினரும் ,உத்தரப் பிரதேசத்தில் 37.79 விழுக்காட்டினரும் பலபரிமாண வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2014 இந்திய மாதிரிக் கணக்கீட்டு அலுவலகத்தின் கணக்கெடுப்பின்படி ,உழைப்புச் சக்தியில் 93விழுக்காட்டினர் அமைப்புசாராத் தொழிலாளர்களாக வாழ்வாதாரத்தை ஈட்டியுள்ளனர் , தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களும் அமைப்புசாராத் தொழிலாளர்களே . இந்தியாவின் பொருளாதாரத்தில் 80 விழுக்காடு டிஜிட்டல்மயமாக்கத்தால் அமைப்புசார் துறையாக உள்ளதென இந்திய ஸ்டேட் வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது .டிஜிட்டல்மயமாக்கத்தால் அமைப்புசாராப் பொருளாதாரத்தின் பங்கு மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) 15 முதல் 20 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது .எப்படி இந்த மாயமந்திரம் நிகழ்ந்தது ? அமைப்புசாராத் தொழிலாளர்கள் குறித்த தரவுகளை இ-ஷ்ரம் என்ற அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான தரவுத்தளத்தில் பதிவு செய்வதனாலேயே அமைப்புசாராத் துறையை அமைப்புசார் துறையாக மாறியதாகக் குறிப்பிடுகிறது இந்த அறிக்கை .கடந்த சில ஆண்டுகளில் ரூ. 13லட்சம் கோடி மதிப்பிலான பொருளாதாரம் இவ்வாறு அமைப்புசார் பொருளாதாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதாக இந்த அறிக்கை கூறுகிறது. அமைப்புசாராத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான எந்தத் திட்டங்களும் செயல்படுத்தாமல் வெறும் தரவுகளை பதிவு செய்வதன் மூலம் மட்டுமே அவர்களை அமைப்புசார் துறையாக அங்கீகரிக்கும் கேலிக்கூத்து வறுமைக்கோட்டைக் குறைத்து வறுமையின் அளவைக் குறைப்பது போன்றதுதான் .டிரம்ப் வருகைக்காக சேரிகள் மறைக்கப்பட்டது போல் சமூகப் பாதுகாப்பு இல்லாத தொழிலாளர்களின் உண்மையான எண்ணிக்கை இவ்வாறு மறைக்கப்படுகிறது.

2018 முதல் ,கடன் அட்டையின் மூலம் பெறும் கடன் அதிகரித்துள்ளதால் விவசாயத் துறை 25-20விழுக்காடு அமைப்புசார் பொருளாதாரத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறுகிறது

இந்த அறிக்கை.

நவம்பர் 30 வரை கோவிட் தடுப்பூசி ஒரு முறை போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 54.9விழுக்காடாகவும் ,இரு முறை போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 24.8 விழுக்காடாகவும் உள்ளது .புதிய ஓமைக்ரான் கோவிட் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் ரூபாயின் மதிப்பு வீழ்ந்துள்ளது .பங்குச் சந்தையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது .விரைவில் விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களின் விலை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது .ஏர்டெல் , வோடோஃபோன் ,ஜியோ கைபேசிக் கட்டணங்களை 20 விழுக்காட்டிற்கு மேல் அதிகரித்துள்ளனர் . அடைமழையால் காய்கறி வரத்து தடைபட்டதால் தக்காளி விலை 100 ரூபாய்க்கு மேல் அதிகரித்துள்ளது.

வேகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களுக்கான தொழில்துறையின் மதிப்பு , நகர்ப்புறங்களில் 12.6 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதில் ,செப்டம்பர் காலாண்டில் விற்பனையின் அளவு 1.2 விழுக்காடு மட்டுமே அதிகரித்துள்ளது ,விலை உயர்வினால் மட்டுமே 11.3 விழுக்காடு மதிப்பு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது .கிராமங்களில் விற்கப்படும் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களின் மதிப்பு செப்டம்பர் காலாண்டில் 9.4 விழுக்காடு அதிகரித்துள்ளது ;ஆனால் விற்பனையின் அளவு 2.9 விழுக்காடு குறைந்துள்ளது . பொருட்களின் விலை 12.7 விழுக்காடு உயர்ந்துள்ளது.

அதிகரித்து வரும் வேலையின்மையும் ,உணவுப் பொருட்கள் ,பிற அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வும் நாட்டில் பசி ,பட்டினி ,வறுமையின் அளவை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது .விவசாயிகளின் வழியில் தொடர்ந்து போராட்டங்களை வலுப்படுத்தாமல் நல்வாழ்வு பெறுவதற்கான வாய்ப்புகளை மக்களால் பெற முடியாது .

“பிற்போக்காளர்களாக“க் கருதப்படும் விவசாயிகள்தான் இன்று போராட்டக் களத்தில் முன்னணியில் உள்ளனர் .விவசாயிகள் போர்க்குணம் மிக்கவர்கள் என்பதை நிரூபித்த வரலாற்று நிகழ்வின் சாட்சியாக இருப்பது மட்டும் போதாது .பாஜக அரசின் சந்தர்ப்பவாதப் பின்வாங்கலை உண்மையான மக்கள் ஜனநாயகத்தைப் பெற்றெடுப்பதற்கான நல்வாய்ப்பாக்கி வலுவான போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்போம் .நமக்குக் கிடைத்த இந்தப் பகுதியளவு வெற்றியிலிருந்து முழுவெற்றியைப் பெறுவதற்கான வழியை ஏற்படுத்துவோம் . நவீன தாராளமயத்தை மண்கவ்வச் செய்வோம்.

# அயல்நாட்டுக் கொடுப்பு நிலை

## (Balance of Payments)

சமந்தா




1980களிலிருந்து நவின தாராளமயக் கொள்கைகள் அதிகமாகச் செயல்படுத்தப்பட்டதால் இந்தியாவின் இறக்குமதிச் செலவினமும் ,வெளிநாட்டுக் கடன் நிலையும் அதிகரித்தது1991 .இல் வளைகுடாப் போர் இந்தியாவின் நிதிநிலையில் இரண்டு எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியது . முதலாவதாக ,வளைகுடாப் போரின் விளைவாகக் கச்சா எண்ணெய் விலை மிகவும் அதிகரித்தது . இதனால் இந்தியாவின் இறக்குமதிச் செலவினம் அதிகரித்து வர்த்தகச் சமநிலையை பாதித்தது . இரண்டாவதாக வளைகுடா நாடுகளில் வேலை செய்யும் இந்தியர்கள் இந்தியாவுக்கு அனுப்பும் பணத்தின் அளவும் குறைந்து போனது .இதன் விளைவாக1991 இல் இந்தியா அயல்நாட்டுக் கொடுப்பு நிலை நெருக்கடியால் பாதிக்கப்பட்டது .இந்தியா சர்வதேசப் பண நிதியத்தின் நிதி உதவியை நாடியது .சர்வதேசப் பண நிதியம் இந்தியாவின் மீது நான்கு நவீன தாராளமய நிபந்தனைகளை விதித்தது .அதன் விளைவாக இந்தியாவில்" பொருளாதாரச் சீர்திருத்தம் "என்ற பெயரில் பொருளாதாரச் சீர்கேட்டுக் கொள்கைகள் தீவிரமாகக் நடைமுறைப்படுத்தப்பட்டன .அப்போது

பிடித்த சனிதான் 30 ,ஆண்டுகளாகி விட்டது ,அதிலிருந்து இந்தியா மீளவில்லை என்பதுடன் அந்தப் படுகுழிப் பாதையிலேயே மிகவும் வேகமாகப் பயணித்து வருகிறது .இந்தியாவின் பொதுத்துறைச் சொத்துக்களும் ,முதலீடுகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து வருகின்றன. இன்னும் கொஞ்ச காலத்தில் பொதுத்துறை என்றால் என்ன எனக் கேட்கும் நிலை வந்து விடும் போலிருக்கிறது .

இந்தியா நவீன தாராளமயப் பொறிக்குள் கழுத்தை நீட்டக் காரணமாகக் கருதப்படுகிற அயல்நாட்டுக் கொடுப்புநிலை நெருக்கடியைப் புரிந்துகொள்ள முதலில் அயல்நாட்டுக் கொடுப்பு நிலை என்றால் என்ன என்பதை இப்பொழுது பார்ப்போம்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் மூடிய அமைப்பாக இல்லை ,அதாவது அதன் பொருளாதாரச் செயல்பாடுகள் உள்நாட்டுக்குள் முடிவடைந்து விடுவதில்லை .பொதுவாக ஒரு நாடு ,உலகின் பல நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ளது அதாவது அந்நாடுகளுக்குப் பொருட்கள் , சேவைகளை விற்கிறது ,அந்நாடுகளிடமிருந்து பொருட்கள் ,சேவைகளை வாங்குகிறது .பண்டைய தமிழ்நாடு கடல்கடந்து கிரேக்கம் ,ரோமாபுரி எனப் பல்வேறு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த வரலாற்றை நாம் அறிவோம்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலையையும் ,நடப்பு நிதி நிலையையும் பற்றி அறிந்து கொள்வதற்கான முக்கியக் குறியீடுகளில் ஒன்றாக அயல்நாட்டுக் கொடுப்புநிலை உள்ளது .

ஒரு நாடு உலகின் பிற நாடுகளுடன் எத்தகைய பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளது ,அது அந்நாட்டின் நிதிநிலையில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதை அயல் நாட்டுக் கொடுப்பு நிலையின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

ஒரு நாடு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் விளைவாக எவ்வளவு வருவாய் பெறுகிறது ,உபரி வருவாய் பெறுகிறதா ,அல்லது கடன் நிலையில் உள்ளதா என்பதை வெளிநாட்டுக் கொடுப்புநிலையிலிருந்து அறிந்து கொள்ளலாம் .இவை அல்லாமல் வெளிநாட்டிலிருந்து பெறும் வருவாய் ,வெளிநாட்டிற்குச் செலுத்தவேண்டிய வருவாய் ,பணப் பரிமாற்றங்கள் ,மூலதனப் பரிமாற்றங்கள் ,நிதிப் பரிமாற்றங்கள் ,ஒரு தரப்பிலிருந்து மட்டும் செலுத்தப்படும் பணம் இவை அனைத்துமே இதன் உட்கூறுகளாக பதிவுசெய்யப்படுகின்றன.

அயல்நாட்டுக் கொடுப்புநிலை மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது .அவையாவன.

1. நடப்புக் கணக்கு) Current Account);
2. மூலதனக் கணக்கு) Capital Account);
3. நிதிக் கணக்கு) Financial Account).

இவை ஒவ்வொன்றும் சில உட்கூறுகளைக் கொண்டுள்ளன. அவை என்னென்ன என்பதைப் பற்றி விரிவாகப் பார்ப்போம் .

1. நடப்புக் கணக்கு:

i) வர்த்தகம்:

அ (பொருட்கள்;

ஆ (சேவைகள்.

ii) வருவாய்:

அ (ஊழியர்களின் வருவாய்;

ஆ (முதலீட்டு வருவாய்.

iii) ஒரு தரப்பிலான நடப்புக் கொடுப்புகள்:

அ (வெளிநாட்டிலிருந்து ஊழியர்கள் அனுப்பும் வருவாய்;

ஆ (வெளிநாட்டிலிருந்து பெறும் நிதி உதவி.

2. மூலதனக் கணக்கு:

i) மூலதனப் பரிமாற்றங்கள்;

ii) நிதியல்லாத சொத்துக்களின் வாங்கல் விற்றல்.

3. நிதிக் கணக்கு:

i) நிதி முதலீடு) போர்ட்ஃபோலியோ;(

ii) பங்குகள்;

iii) கடன்) பத்திரங்கள் ,வருவிப்புகள்;(

iv) நேரடி அந்நிய முதலீடு;

v) பிற முதலீடுகள்) வர்த்தகக் கடன் ,வங்கிக்கடன்;(

vi) சேம இருப்புகள்.

1. நடப்புக் கணக்கு:

ஒரு நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்புநிலையின் மூன்று கூறுகளில் ஒன்றாக நடப்புக் கணக்கு உள்ளது .இதன் உட்கூறுகளாக நாட்டின் வர்த்தகச் சமநிலையும் ,வருவாய்ச் சமநிலையும் உள்ளன. இவற்றின் மதிப்புகளைக் கூட்டி, நடப்புக் கணக்கு நிலை அறியப்படுகிறது .

எளிதாகக் கூறவேண்டுமெனில் ,ஒரு நாட்டின் நடப்புக் கணக்கு என்பது அதன் இறக்குமதிகள் ,ஏற்றுமதிகள் ,நிகர வெளிநாட்டு வருவாய் ,ஒரு தரப்பு பணக் கொடுப்புகள்

ஆகியவற்றின் கூட்டுத்தொகையைக் குறிப்பிடுகிறது .

ஒரு நாட்டின் நடப்புக் கணக்கு நேர்நிறையாகவோ ,எதிர்மறையாகவோ ,அல்லது சமநிலையிலோ காணப்படலாம்.

ஒரு நாட்டின் நடப்புக் கணக்கு சமநிலையில் இருக்கும் போது, அதன் குடிமக்களும் , நிறுவனங்களும் ,அரசும் பிற நாடுகளுடன் மேற்கொள்ளும் செலவுகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றிருக்கும் நிலையைக் குறிக்கிறது. இதில் நிதி என்பது வருவாய் மற்றும் சேமிப்பினைக் குறிப்பிடுகிறது .செலவுகளில் நுகர்வுச் செலவினம் ,நிறுவனங்கள் ,அரசு ஆகியவற்றின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளும் செலவினமும் அடங்கும்.

ஒரு நாடு பிற நாடுகளுடன் மேற்கொள்ளும் செலவுகளை விட அதிகமாக வருவாய் ஈட்டும் போது .நடப்புக் கணக்கு நேர்நிறையாக உள்ளது .ஒரு நாடு பிற நாடுகளுடன் மேற்கொள்ளும் செலவுகளை விடக் குறைவாக வருவாய் ஈட்டும் போது நடப்புக் கணக்கு எதிர்மறையாக உள்ளது .இதுவே நடப்புக் கணக்குப் பற்றாக்குறை எனக் குறிப்பிடப்படுகிறது .ஒரு நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை மிகவும் அதிகரிக்கும் போது நிதி நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் .அந்நாட்டு நாணயம் மதிப்பிழக்கும் அபாயம் ஏற்படும்.

நாட்டின் தேசிய வருவாய்க் கணக்குகளை நேரடியாகப் பாதிக்கும் அனைத்து ஓட்டங்களும் இந்தக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன.

நடப்புக் கணக்கின் கூறுகள் :

வர்த்தகச் சமநிலை :

வர்த்தகச் சமநிலை என்பது நடப்புக் கணக்கின் மிகப் பெரிய அங்கமாகும். இதில் பொருட்களின் ஏற்றுமதி ,இறக்குமதிகளும் ,சேவைகளின் ஏற்றுமதி ,இறக்குமதிகளும் அடங்கும்.

ஒரு நாடு உலகின் இதர நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருட்கள் ,சேவைகளின் வர்த்தகத்தைக் கொண்டு வருவாய் ஈட்டுகிறதா ?இல்லை ,பிற நாடுகளுடன் வரவைத் தாண்டிச் செலவு செய்கிறதா ?என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் .அதாவது வர்த்தகச் சமநிலை என்பது ஒரு நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி மதிப்பிற்கும் ,ஏற்றுமதி மதிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கிறது .பொருட்களின் இறக்குமதியையும் , ஏற்றுமதியையும் வெளிப்படையாக அறிய முடியும் என்பதால் இது கட்புலனாகும் இறக்குமதி , ஏற்றுமதி என்றும் அழைக்கப்படுகிறது. சேவைகளில் செய்யப்படும் இறக்குமதியும் ,ஏற்றுமதியும்

வெளிப்படையாகப் புலனாகாது ஆகையால் கட்புலனாகா இறக்குமதி ,ஏற்றுமதி என்றும் அழைக்கப்படுகிறது.

ஒரு நாடு ஏற்றுமதியின் மூலம் பெறும் வருவாய் ,அதன் இறக்குமதிச் செலவினங்களை விட அதிகமாக இருக்கும் நிலை வர்த்தக உபரியைக் குறிக்கிறது .ஒரு நாட்டின் இறக்குமதி செலவினங்கள் அந்நாட்டின் ஏற்றுமதி வருவாயை விட அதிகமாக இருக்கும் நிலை வர்த்தகப் பற்றாக்குறையைக் குறிக்கிறது.

பொதுவாக ஒரு நாடு எளிதில் விளைவிக்கக் கூடிய அல்லது உற்பத்திசெய்யக் கூடிய பொருட்களை ஏற்றுமதி செய்கிறது .உள்நாட்டில் பற்றாக்குறையாக உள்ள பொருட்களைப் பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்கிறது .ஒரு நாட்டில் பயிர்ச்சேதம் ,வறட்சி ஆகியவற்றால் ஏற்றுமதி பாதிக்கப்படும் போது அதன் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிக்கலாம் .இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றில் ஏற்படும் விலை உயர்வால் இறக்குமதிக்கான செலவினம் அதிகரிப்பதாலும் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிக்கலாம் . அதிகரிக்கும் வர்த்தகப் பற்றாக்குறை மட்டுமே கூட நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஏற்படக் காரணமாக அமையலாம்.

வருவாய் சமநிலை :

ஒரு நாட்டின் வருவாயின் வரவு ,வெளியேற்றம் இவற்றுக்கிடையிலான வேறுபாடு , முதலீடுகளிலிருந்து பெறும் வருவாய் ,வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதி உதவி அல்லது மானியங்கள் ,ஒரு தரப்பிலான பணக்கொடுப்புகள் ஆகியவை அனைத்துமே வருவாய்ச் சமநிலையை நிர்ணயிக்கும் உட்கூறுகளாகும்.

ஒரு நாட்டின் நிகர வருவாய் என்பது அதன் குடிமக்களும் நிறுவனங்களும் அரசும் வெளிநாட்டிலிருந்து பெறும் வருவாயிலிருந்து அந்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு அனுப்பும் வருவாயைக் கழிப்பதன் மூலம் கிடைக்கும் மதிப்பைக் குறிக்கிறது. .நாட்டின் குடிமக்கள் இரண்டு ஆதாரங்களிலிருந்து வருவாய் பெறுகிறார்கள். முதலாவது ஒரு நாட்டின் குடிமக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்கள் ,முதலீடுகளிலிருந்து ஈட்டப்படும் வட்டி ,ஈவுத்தொகை இதில் அடங்கும். இரண்டாவது ஆதாரம் ,வெளிநாட்டில் பணிபுரியும் ஒரு நாட்டின் குடிமக்கள் தங்கள் வருவாயிலிருந்து மேற்கொள்ளும் ஒரு தரப்பிலான பணக்கொடுப்புகள் ஆகும் .வெளிநாட்டினருக்கு வழங்கப்படும் வருவாய் என்பது ,ஒரு நாட்டில் உள்ள வெளிநாட்டுச்

சொத்துக்களிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் வட்டி மற்றும் ஈவுத்தொகையைக் குறிக்கும் . இரண்டாவதாக ஒரு நாட்டில் வேலை செய்யும் வெளிநாட்டினர் பெறும் வருவாயிலிருந்து வேறு நாடுகளுக்கு அனுப்பும் ஒரு தரப்பு பணக் கொடுப்புகளையும் அது குறிக்கும்.

வெளிநாட்டினரிடமிருந்து ஒரு நாட்டின் தனிநபர்கள் ,நிறுவனங்கள் ,அரசு பெறும் வருவாய் வெளிநாட்டினருக்கு செலுத்தப்படும் வருவாயை விட அதிகமாக இருந்தால் நேர்நிறையான வருவாய்ச் சமநிலையுடன் உபரி வருவாய் பெறும் நிலையைக் குறிக்கிறது. அதற்கு மாறாக வெளிநாட்டினருக்குச் செலுத்தப்படும் வருவாயை விடக் குறைவாக இருந்தால் ,அது எதிர்மறையான வருவாய்ச் சமநிலையை வருவாய்ப் பற்றாக்குறையைக் குறிக்கிறது. வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணம் திடீரெனக் குறையும் போது நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஏற்படலாம் .ஒரு நாட்டின் அதிகரிக்கும் வர்த்தகப் பற்றாக்குறையை அதன் உபரி வருவாயைக் கொண்டு ஈடுசெய்ய முடியும் போது நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்கப்படும்.

மூலதனக் கணக்கு:

மூலதனக் கணக்கின் கீழ் மூலதனப் பரிமாற்றங்கள் ,முதலீடுகள் ,தள்ளுபடி செய்யப்படும் கடன்கள் ,காப்புரிமை போன்ற நிதியல்லாத சொத்துக்களின் பரிவர்த்தனைகள்) பெறுதல் ,விற்றல் ( ஆகியவை இடம்பெறுகின்றன .மூலதன இருப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் மூலதனக் கணக்கில் பதிவு செய்யப்படுகிறது .ஒரு நாட்டின் தனிநபர்கள் ,நிறுவனங்கள் ,அரசு பெற்றுள்ள வெளிநாட்டுச் சொத்துகளுக்கும் ,வெளிநாடு உள்நாட்டில் பெற்ற சொத்துகளுக்கும் இடையிலான மாறுபாடுகள் இதன் மூலம் பதிவு செய்யப்படுகின்றன.

நிதிக்கணக்கு:

நிதிக்கணக்கின் கீழ் நிதி முதலீடுகள் ,நேரடி அந்நிய முதலீடுகள் ,பிற முதலீடுகள் ,சேம இருப்புகள் ஆகியவை இடம்பெறுகின்றன. நிதி முதலீடுகள் என்பது பங்குகள் ,பத்திரங்கள் , வருவிப்புகள் போன்ற நிதிச்சொத்துக்களில் செய்யப்படும் முதலீடுகளை குறிப்பிடுகிறது .நேரடி அந்நிய முதலீடு என்பது ஒரு நாட்டு நிறுவனங்களின் பங்குகளில் குறைந்தபட்சமாக 10 விழுக்காடு பங்குகளை வெளிநாட்டு நிறுவனங்கள் / முதலீட்டாளர்கள் பெறுவதைக் குறிக்கிறது .பிற முதலீடுகள் என்பது வர்த்தகக் கடன்கள் ,வங்கிக் கடன்கள் ஆகியவற்றைக் குறிக்கும் .சேம இருப்புகள் என்பது ஒரு நாட்டின் மத்திய வங்கியிடம் உள்ள வெளிநாட்டு நாணயங்கள் ,தங்க

இருப்புகள் ஆகியவற்றைக் குறிப்பிடும்.

தேசிய இருப்புநிலை அறிக்கையை நேரடியாகப் பாதிக்கும் அனைத்து ஓட்டங்களும் மூலதனக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையானது மூலதனக் கணக்கின் உபரியால் சமன் செய்யப்படவேண்டும் . இல்லையென்றால் நிதி நெருக்கடி ஏற்படலாம்.

அயல்நாட்டுக் கொடுப்புநிலை என்பது ஓராண்டில் வெளி உலகத்துடனான ஒரு நாட்டின் மொத்தப் பரிவர்த்தனைகளின் சுருக்கமான கணக்கியல் அறிக்கையாகும். பொருட்கள் ,சேவைகள் , மூலதனப் பரிவர்த்தனைகள் மற்றும் பிற பரிவர்த்தனைகளும் இதில் பதிவுசெய்யப்படுகின்றன. இதன் மூலம் ஒரு நாடு வெளி உலகுடன் மேற்கொள்ளும் அனைத்துப் பரிவர்த்தனைகளும் பற்றுகள் என்றும் வரவுகள் என்றும் பிரிக்கப்படுகின்றன. அயல்நாட்டுக் கொடுப்புநிலைக் கணக்கை உருவாக்குவதில் இரட்டைப் பதிவு முறை பின்பற்றப்படுகிறது. நிறுவனங்களின் இருப்புநிலை அறிக்கையில் பற்றுகள் இடது பக்கத்திலும் ,வரவுகள் வலது பக்கத்திலும் காட்டப்படும். அயல்நாட்டுக் கொடுப்புநிலையில் ,வரவு இடதுபுறத்திலும் ,பற்று வலதுபுறத்திலும் காட்டப்படுகிறது .

ஒரு நாட்டின் குடிமக்கள் ,நிறுவனங்கள் மற்றும் அரசு வெளிநாட்டின் குடிமக்கள் , நிறுவனங்கள் ,அரசுக்கு பணம் செலுத்துவதற்கான கடப்பாட்டை உருவாக்கும் எந்தவொரு செயலும் கடனாகப் பதிவு செய்யப்படுகிறது .அதேசமயம் ஒரு நாட்டிற்கு வெளிநாட்டின் குடிமக்கள் , நிறுவனங்கள் ,மற்றும் அரசு ஆகியவை பணம் செலுத்துவதற்கான கடப்பாட்டை உருவாக்கும் எந்தவொரு செயலும் பற்று என வரவுப் பக்கத்தில் சேர்க்கப்படும் .உதாரணமாக ஏற்றுமதியிலிந்தும் முதலீடுகளிலிருந்தும் பெறும் வருவாய்' ,பற்று 'பிரிவில் சேர்க்கப்படும் . வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி ,இறக்குமதிச் செலவினங்கள்' கடன் 'பிரிவில் வைக்கப்படும்.

அயல்நாட்டுக் கொடுப்புநிலை ஒரு கணக்கியல் அறிக்கை என்பதால் ,அதில் உள்ள மொத்தப் பற்றுகளின் தொகை ,எப்பொழுதும் மொத்தக் வரவுகளின் தொகைக்குச் சமமாக இருக்க வேண்டும். அதற்கிடையில் ஏற்படும் எந்த வேறுபாடும் புள்ளியியல் முரண்பாடாகக் காட்டப்படும். பொதுவாக ஒரு நாட்டின் நடப்புக் கணக்கும் ,மூலதனக் கணக்கும் ஒன்றை ஒன்று சமன் செய்ய வேண்டும் .ஒரு நாட்டின் நடப்புக் கணக்கையும் ,மூலதனக் கணக்கையும் ஒன்றுசேர்க்கும் போது பூஜ்ஜியம் வர வேண்டும் .பிழைகள் ,விடுபடுதல் ஆகியவற்றால் பூஜ்ஜியம் அல்லாது வேறு மதிப்புகளும் கிடைக்கலாம்.

# வரித்தள அரிப்பும் இலாபக் கடத்தலும்) BEPS)

சமந்தா




பொருளாதார ஒத்துழைப்பு ,வளர்ச்சிக்கான அமைப்பு) OECD) வரி அரிப்பு ,இலாபக் கடத்தலைப் பின்வருமாறு வரையறுக்கிறது .பல்வேறு நாடுகளின் வரி அமைப்புகளுக்கு இடையே உள்ள இடைவெளிகள் மற்றும் வேறுபாடுகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதால் உள்நாட்டு வரி வருவாயின் அடிப்படை அரிக்கப்பட்டு ,இலாபம் கடத்தப்படுவது) BEPS) அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. வளரும் நாடுகளின் பெருநிறுவன வரி வருவாய் இதனால் கணிசமாகக் குறைந்து போவதால் அந்நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன .வரி அரிப்பு ,இலாபக் கடத்தல் நடைமுறைகளால் நாடுகளுக்கு ஆண்டுதோறும் 240-100 பில்லியன் அமெரிக்க டாலர்கள் இழப்பு ஏற்படுகிறது ,இது உலகளாவிய கார்ப்பரேட் வரி வருவாயில்%10-4 க்குச் சமமானதாகும். நிறுவனங்கள் சர்வதேச அளவில் செயல்படுகின்றன ,எனவே வரி அரிப்பு ,இலாபக் கடத்தலை சமாளிக்கவும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வரிமுறைகளில் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் அரசாங்கங்கள் இணைந்து செயல்பட வேண்டும்.

வரி அரிப்பு ,இலாபக் கடத்தல் என்பது சர்வதேச அளவில் வரி விதிகளில் உள்ள இடைவெளிகள் மற்றும் பொருத்தமின்மைகளைப் பயன்படுத்தி இலாபத்தைச் செயற்கையாக) பொருளாதார நடவடிக்கைகள் குறைவாக இருக்கும் இடங்களுக்கு (வரி குறைந்த அல்லது வரி

இல்லாத இடங்களுக்குக் கடத்துவதன் மூலமும் வட்டி அல்லது உரிமக் கட்டணம் போன்ற வருவாயைக் குறைக்கும் கொடுப்பனவுகள் மூலமும் வரி வருவாயின் அடிப்படைகளை அழிக்கும் வரித் திட்டமிடல் உத்திகளைக் குறிக்கிறது. இவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்களில் சில சட்டவிரோதமானவை என்றாலும் ,பெரும்பாலானவற்றை அவ்வாறு கூற இயலாது சட்டமுறைகளில் உள்ள ஓட்டைகளை கரும் / சாம்பல் பகுதிகளைப் பயன்படுத்தி இந்த உத்திகள் கடைபிடிக்கப்படுகிறது .இது வரி அமைப்புகளின் நீதியையும் ,ஒருமைப்பாட்டையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது ,ஏனெனில் எல்லைகளுக்கு அப்பால் செயல்படும் நிறுவனங்கள் உள்நாட்டு மட்டத்தில் செயல்படும் நிறுவனங்களை விட ஆதாயங்களைப் பெற வரி அரிப்பு ,லாப கடத்தலை பயன்படுத்தலாம். மேலும் ,பன்னாட்டு நிறுவனங்கள் வருமான வரியைச் சட்டப்பூர்வமாகத் ஏய்ப்பதை வரி செலுத்துவோர் பார்க்கும் போது ,அது அனைத்து வரி செலுத்துவோரின் தன்னார்வ வரி இணக்க நடைமுறையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

பொருளாதார ஒருங்கிணைப்பு ,வளர்ச்சிக்கான அமைப்பையும் ,ஜி 20-அமைப்பையும்) OECD / G20) உள்ளடக்கிய கட்டமைப்பு வரி அரிப்பு ,இலாபக் கடத்தலில் இணைந்து செயல்படுவதால் 141 , நாடுகள் ,நீதி அமைப்புகள் ,வரி ஏய்ப்பை சமாளிக்கவும் ,சர்வதேச வரி விதிகளின் ஒத்திசைவை மேம்படுத்தவும் ,மிகவும் வெளிப்படையான வரிச் சூழலை உறுதிசெய்யவும் ,பொருளாதார இணையமயமாக்கலில் இருந்து எழும் வரி சவால்களை எதிர்கொள்ளவும் 15 நடவடிக்கைகளை செயல்படுத்துகின்றன என்று குறிப்பிடப்படும் போதும் ,பன்னாட்டு நிறுவனங்கள் அவற்றில் மண்ணைத் தூவி அவற்றைக் கண்துடைப்பு நாடகங்களாக்கி விட்டன இல்லை என்றால் வரி அரிப்பு , இலாபக் கடத்தல் என்பது ஒரு தொடர் நிகழ்வாகி இருக்க முடிந்திருக்காதே!

2021 அக்டோபர் 31 அன்று ஜி 20-கூட்டமைப்பு ஒரு புதிய உலகளாவிய குறைந்தபட்சப் பெருநிறுவன வரிக்கு ஒப்புதல் அளித்தது ,இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது .

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ,பெருநிறுவனங்கள் மீதான வரிவிதிப்புக்கு இரண்டு" அடிப்படைகள் " உள்ளன. அடிப்படை1 இன் கீழ் ,அரசாங்கங்கள் 10 விழுக்காட்டிற்கு மேலான இலாப வரம்புகளுக்கு வரி விதிக்க முடியும் .அடிப்படை2 இன் கீழ் ,உலகளாவியக் குறைந்தபட்ச வரி விகிதம் 15 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*பன்னாட்டு நிறுவனங்களின் சட்டப்பூர்வ வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட 15விழுக்காடு உலகளாவிய குறைந்தபட்சப் பெருநிறுவன வரியானது ,வரிப் புகலிடங்களில்*

காணப்படுவது போல் மிகவும் குறைவாக உள்ளதால் வரி அரிப்பையும் ,இலாபக் கடத்தலையும் இதன் மூலம் முற்றிலுமாகத் தடுக்க முடியாது என்பதே எதார்த்தமான உண்மை .மேலும் இது இலாபம் பணக்கார நாடுகளிடம் இருப்பதை உறுதி செய்வதற்கான உட்பிரிவுகளால் நிறைந்துள்ளது என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வரி விதிகளை அமைக்கும் பொருளாதார ஒருங்கிணைப்பு ,வளர்ச்சிக்கான அமைப்பின்) OECD) நாடுகளே உலகளாவிய வரி மோசடியில் மூன்றில் இரண்டு பங்குக்குக் காரணம் என்று கூறுகிறது வரி நீதிக்கான வலையமைப்பு.

ஐக்கிய முடியரசில் உள்ள வரி நீதிக்கான வலையமைப்பு) Tax Justice network) அனைவரின் தேவைகளுக்கும் சம மதிப்பளிக்கும் ஒரு நியாயமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு நம் வரியமைப்புகளும் ,நிதியமைப்புகளும் மிகவும் சக்தி வாய்ந்த கருவிகள் என்று கருதுகிறது. வரியமைப்பில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவதற்கான சீர்திருத்தங்களை வலியுறுத்திப் பரவலாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும் செயல்பட்டு வருகிறது .இந்த அமைப்பு வரி ஏய்ப்பு ,இலாபக் கடத்தல் குறித்துப் பின்வருமாறு விளக்கம் அளிக்கிறது.

இலாபக் கடத்தல் என்பது பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த வரி செலுத்தப் பயன்படுத்தும் ஒரு நுட்பமாகும் ,இது ஒரு பன்னாட்டு நிறுவனம் உற்பத்தி செய்யும் அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்கும் நாட்டில் கிடைக்கும் இலாபத்தை வரிப் புகலிடத்திற்குக் கடத்துவதைப் பகுதியாகக் கொண்டுள்ளது. இலாபத்தை ஒரு வரிப் புகலிடத்திற்கு மாற்றுவதன் மூலம் ,பன்னாட்டு நிறுவனம் ,அது பொருட்கள் ,சேவைகளை உற்பத்தி செய்யும் / விற்கும் நாடுகளில் அதன் இலாபத்தின் மதிப்பைக் குறைத்து காட்டுகிறது , அதனால் அந்த நாடுகளில் குறைந்த வரியே செலுத்துகிறது அல்லது வரியே செலுத்துவதில்லை. வரிப் புகலிடத்திற்கு மாற்றப்படும் இலாபம் ,அங்கு மிகக் குறைந்த நிறுவன வரி உள்ளதா அல்லது கார்ப்பரேட் வரி இல்லையா என்பதைப் பொறுத்து மிகக் குறைந்த விகிதத்திலேயே வரி விதிக்கப்படுகிறது.

இலாபத்தைக் கடத்துவதற்கு பொதுவாகக் கையாளப்படும் முறையானது ,ஒரு பன்னாட்டு நிறுவனம் மற்ற நாடுகளில் உள்ள துணை நிறுவனங்களிடமிருந்து கட்டணச் செலவுகளை வசூலிக்க வரிப் புகலிடத்தில் உள்ள துணைநிறுவனத்தைப் பயன்படுத்துவதாகும் .உதாரணமாக, பாரடைஸ் பேப்பர்ஸ் ஊழலில் ,நைக் நிறுவனம் தனது இலாபத்தின் பெரும் பகுதியை - பூஜ்ஜிய வரி நிலவும் இடமான – பெர்முடாவில் தங்கள் அறிவுசார் சொத்துகளை (அதாவது ,லோகோ ,

பிராண்டிங் ,ஷூ டிசைன்கள்) பதிவு செய்வதன் மூலம் அந்நாட்டுக்குக் கொண்டுசெல்வதை பத்திரிகையாளர்கள் கண்டுபிடித்தனர். பெர்முடாவில் உள்ள நைக்கின் துணை நிறுவனம் , அறிவுசார் சொத்துரிமையைப் பயன்படுத்துவதற்காக உலகின் பிற பகுதிகளில் உள்ள நைக் துணை நிறுவனங்களிடமிருந்து அதிக உரிமக் கட்டணத்தை வசூலித்தது. இது நைக் காலணிகளை விற்கும் நாடுகளில் குறைவான வரியைச் செலுத்தவும் ,வரி செலுத்தப்படாத வரி புகலிடத்தில் இலாபத்தை பில்லியன்களில் ஈட்டவும் வழிசெய்தது.

பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வோராண்டும் $1.38 டிரில்லியன் அளவு இலாபத்தை வரிப் புகலிடங்களுக்குக் கடத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது ,இதனால் நாடுகளுக்கு ஒவ்வோராண்டும், கார்ப்பரேட் வரி வருவாயில் 245$ பில்லியன் இழப்பு ஏற்படுகிறது.

இலாப இடமாற்றத்தை சமாளிப்பதற்கு மிகவும் பயனுள்ள எளிய வழிகளில் ஒன்று , பன்னாட்டு நிறுவனங்களை அவை செயல்படும் ஒவ்வொரு நாட்டிற்குமான அறிக்கைகளையும் வெளியிடச் செய்ய வேண்டும்.

வரி ஏய்ப்பு சட்டப்பூர்வமானதா ?வரி ஏய்ப்பிலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது ? இல்லை ,வரி தவிர்ப்பை" சட்டப்பூர்வமானது "என்று அழைக்க முடியாது ,ஏனெனில்" வரி தவிர்ப்பு "என்று அழைக்கப்படும் பல செயல்பாடுகள் சட்டப்பூர்வ அமைப்பின் சாம்பல் பகுதியைச் சேரும்" .வரி தவிர்ப்பு "என்பது பெரும்பாலும்" சட்டப்பூர்வமாக "வரி குறைவாகச் செலுத்துவதற்கான வழிமுறைகளைக் குறிக்கும் என்று கருதப்படுகிறது அதாவது ஒரு நபர் அல்லது நிறுவனம் செலுத்த வேண்டியதை விடக் குறைவாக வரி செலுத்தும் வகையில் அவர்களின் நிதி விவகாரங்களைக் கட்டமைக்கும் போது நடக்கும். (சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்துதல் போன்றவை) ,அதே நேரத்தில்" வரி ஏய்ப்பு "என்பது சட்டவிரோத வழிகளையும் குறிக்கும். எவ்வாறாயினும் ,நிஜ உலகில் ,இந்த சட்டபூர்வ-சட்டவிரோத வேறுபாடு பெரும்பாலும் காணாமல் போய் விடுகிறது.

"தவிர்த்தல் "என்று அழைக்கப்படும் பலவற்றை" சட்டப்பூர்வமாக "என்று அழைக்க முடியாது ,ஏனெனில் அது சட்டத்தின் கரும் / சாம்பல் பகுதியில் உள்ளது: நீதிமன்றத்தில் வழக்காடும் போது தான் ,சட்டத்தின் எந்தப் பக்கத்தில் அச்செயல்பாடு வருகிறது என்பதை ஒருவரால் நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியும். பல வரிக் கட்டமைப்புகள் ,செல்வந்தர்கள் அல்லது பன்னாட்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்டவையாக இருந்தாலும் ,அவை மிகவும் சிக்கலான எல்லை கடந்த ஏற்பாடுகள் ஆகும்.

ஒரு செயல்பாடு சட்டப்பூர்வமானதா இல்லையா என்பது நீதிமன்றத்தில் வழக்காடும் வரை பெரும்பாலும் தெளிவாகத் தெரிவதில்லை ,மேலும்" தவிர்த்தல் "என்று அழைக்கப்படும் பெரும்பாலான செயல்பாடுகள் இறுதியில் ஏய்ப்பு நடவடிக்கைகளாக உள்ளன .இது சட்டப்பூர்வமாக செலுத்தப்பட வேண்டிய வரிப்பணத்தை தனதாக்கிக் கொள்வதைக் குறிக்கிறது . இவை கவனிக்கப்படவோ அல்லது வெற்றிகரமாக வழக்காடப்படவோ இல்லை என்பதே அதன் பொருள் .இது" ஆபத்தை அகழ்ந்து எடுத்தல் "என்று விவரிக்கப்பட்டுள்ளது - அங்கு தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் வேண்டுமென்றே சட்டத்தின் எல்லைகளைத் தாண்டுகின்றன ,மேலும் அதிலிருந்து விடுபட முடியும் என நம்பிக்கை பெறுகின்றன.2013 ஆம் ஆண்டில் ,பிக் ஃபோர் கணக்கியல் நிறுவனத்தின் மூத்த அதிகாரி ,அரசுக் கண்காணிப்புக் குழுவான இங்கிலாந்தின் பொதுக் கணக்குக் குழுவிடம் ,வாடிக்கையாளர்களுக்கு ,வரித் திட்டங்களை ,அதாவது வரி "தவிர்ப்பு "கட்டமைப்புகளை ,அவற்றின் மூலம் நீதிமன்ற சவாலில் இருந்து தப்பிக்க 25 விழுக்காடு வாய்ப்பு மட்டுமே இருக்கும் எனக் கருதப்பட்டாலும் கூட ,விற்போம் என்று சாட்சியமளித்தார்.

குறைந்த வருவாய் உடைய நாடுகளில் இப்பிரச்சனை மிகவும் மோசமாக உள்ளது ,அங்கு நீதிமன்றங்கள் மற்றும் வரி அதிகாரிகள் நிறுவனங்களுக்கு சாதகமான சில முடிவுகளை அடைய நிறுவனங்கள் அல்லது செல்வந்தர்களின் அழுத்தத்திற்கு ஆளாக நேரிடலாம்.

வரித் தவிர்ப்பு ,வரி மோசடி நடவடிக்கைகள் சமூகத்திற்கான பொதுச் சேவைகளையும் , உள்நாட்டுத் தொழில்களையும் ,எளிய மக்களையும் பாதிக்கும் விதத்தில் நாடுகளின் வரிவருவாயில் பல பில்லியன்களை குறைக்கின்றன .

இந்த காரணங்களுக்காக" வரி தவிர்ப்பு "என்ற வார்த்தையை அரிதாகவே பயன்படுத்துகிறோம் ,அதற்கு பதிலாக" வரி மோசடி "என்ற சொல்லையேப் பயன்படுத்துகிறோம் என்கிறது வரி நீதிக்கான வலையமைப்பு.

செயல்பாட்டின் சட்டப்பூர்வமான தன்மைக்கு பதிலாக சமூகத்திற்கு அதனால் ஏற்படும் இழப்பை சுட்டிக் காட்டுவதற்காக" ,வரி மோசடி "என்ற சொல் சில நேரங்களில்" வரி தவிர்ப்பு " மற்றும்" வரி ஏய்ப்பு "என்பதற்கு பதிலாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களால் பயன்படுத்தப்படுகிறது.

"வரி மோசடி "என்ற வார்த்தையானது" ,வரி தவிர்ப்பு "என்பது சட்டப்பூர்வமானது என்ற தவறான புரிதலிலிருந்து விலகி ,அதற்குப் பதிலாக ,சட்டங்கள் மற்றும் நிதி வழிமுறைகளை தவறாகப் பயன்படுத்துவதன் பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள் போன்ற

*முக்கியமான பிரச்சினைகளில் கவனத்தை செலுத்த வைக்கிறது.*

வரி ஏய்ப்பு சட்டப்பூர்வமானதா இல்லையா ,வரி ஏய்ப்பு முறையானதா ?என்ற கேள்விகளுக்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்ல வேண்டுமானால், இல்லை ,வரி ஏய்ப்பு முறையானது அல்ல என்று கூறி அதற்கான இரண்டு காரணங்களை முன்வைக்கிறது வரி நீதிக்கான வலையமைப்பு .முதலாவதாக ,ஏய்த்தல் என்று அடிக்கடி அழைக்கப்படுவது மேலே விளக்கப்பட்டதன் படி' சட்டப்பூர்வமானது 'அல்ல. இரண்டாவதாக" ,சட்டப்பூர்வமானது "என்பது உண்மையில் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை) .அந்தக் காலத்தில் நிறவெறி சட்டபூர்வமானதாக இருந்துள்ளது(.

---

# மாற்று விலை (Transfer pricing)

## சமந்தா




மாற்று விலை என்றால் என்ன ?மாற்று விலை என்பது பொதுவாகத் தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையேயான சரக்கு ,சேவைப் பரிவர்த்தனைகளின் விலைகளைக் குறிக்கிறது ,

பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு இடையே பரிமாற்றம்

செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மாற்று விலைகளாகும். ஒன்றோடொன்று சார்புடைய நிறுவனங்கள், கூட்டு நிறுவனம், பன்னாட்டு நிறுவனம் ஆகியவை தங்களுக்குள்ளே செய்து கொள்ளும் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தப்படும் விலைகளையும் இது குறிக்கிறது. இது ஒன்றோடொன்று தொடர்பில்லா நிறுவனங்களுக்கு இடையில் நடைபெறும் நிலைமைகளிலிருந்து வேறுபட்ட நிலைமைகளின் கீழ் நடைபெறலாம்.

மாற்று விலையானது ஒரு நிறுவனம் ,தன்னுடைய துணை நிறுவனங்களுக்குள்ளோ அல்லது பொதுவாகக் கட்டுப்படுத்தப்படும் அதே நிறுவனங்களுக்கிடையே பரிமாறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளை மாற்றுவதை அனுமதிக்கிறது. மாற்று விலை என்பது ஒரு கணக்கியல் நடைமுறையாகும் ,இது ஒரு நிறுவனத்தின் ஒரு பிரிவு மற்றொரு பிரிவிற்கு எந்த விலையில் பொருட்கள் ,சேவைகளை வழங்குகிறது, எந்த விலையில் அதனிடமிருந்து பொருட்கள், சேவைகளை வாங்குகிறது என்பதைக் குறிக்கிறது. மாற்று விலை நடைமுறையானது எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கும் உள்நாட்டுப் பரிவர்த்தனைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

மாற்று விலை என்பதை உள்விலை / அக விலை என்றும் குறிப்பிடலாம். இது நிறுவனத்திற்கு வெளியே உள்ள வாடிக்கையாளர்களிடம் வசூலிக்கப்படும் வெளிப்புற விலை அல்லது சந்தை விலையிலிருந்து வேறுபடலாம்.

மாற்று விலைக்குப் பின்வரும் உதாரணத்தைக் கருத்தில் கொள்வோம். ரொட்டி தயாரிக்கும் ஒரு நிறுவனத்திற்கு இரண்டு பிரிவுகள் உள்ளன .முதல் பிரிவு' ம' தானியத்திலிருந்து ரொட்டி மாவு தயாரிக்கிறது. இரண்டாவது பிரிவு' ர' ரொட்டி தயாரிக்கிறது. 'ம' பிரிவு ரொட்டி மாவை கிலோ 5 ரூபாய் விலைக்கு 'ர' பிரிவுக்கு விற்கிறது. 'ம' பிரிவு ரொட்டி மாவை கிலோ 40 ரூபாய் விலைக்கு வெளிச்சந்தைக்கு விற்கிறது. இதில் 'ம' பிரிவு, 'ர' பிரிவுக்கு விற்ற கிலோ 5 ரூபாய் விலை மாற்றுவிலை ஆகும். இது சந்தை சக்திகளால் நிர்ணயிக்கப்படவில்லை.

பன்னாட்டு நிறுவனங்களின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையேயான வணிகப் பரிவர்த்தனைகள் ,ஒன்றை ஒன்று சாராத இரு நிறுவனங்களுக்கிடையேயான பரிவர்த்தனை உறவுகளை வடிவமைக்கும் அதேச் சந்தை சக்திகளுக்கு உட்பட்டதாக இருக்காது. ஒன்றோடொன்று தொடர்புடைய நிறுவனங்களில் ஒரு தரப்பினர் மற்றொன்றுக்குப் பொருட்கள் அல்லது சேவைகளை எந்த விலைகளுக்குப் பரிமாறிக் கொள்கின்றனவோ அந்த விலையே "மாற்று விலை " என்று அழைக்கப்படுகிறது. இது அந்தப் பொருள் அல்லது சேவையின் உள்ளார்ந்த மதிப்புடன்

எந்தத் தொடர்பும் இல்லாமல் ,சந்தை மதிப்பிலிருந்து வேறுபடலாம்.

பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்திற்குட்பட்ட பல்வேறு துணை நிறுவனங்களிடையே அதனதன் பங்களிப்பிற்கு ஏற்ப இலாபங்களை (வட்டி மற்றும் வரி செலுத்துவதற்கு முந்தைய வருவாய்) தங்களுக்குள் ஒதுக்கீடு செய்து கொள்வதற்கான ஒரு முறையாக மாற்று விலையைப் பயன்படுத்துகின்றன.

ஒரு பெரிய கூட்டு நிறுவனம் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது .அந்நிறுவனத்தின் , பிரிவுகள் ஒவ்வொன்றும் அதனதன் சொந்த இலாபத்திற்குப் பொறுப்பாகும் ,பிரிவுகள் பெரும்பாலும் வெளி வாடிக்கையாளருடன் பரிவர்த்தனை செய்வது போல தங்களுக்குள்ளும் பரிவர்த்தனை செய்து கொள்கின்றன. உள் பரிவர்த்தனைகள் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலாபத்தைப் பாதிக்கவில்லை என்றாலும் ,அவை தொடர்புடைய உட்பிரிவுகளின் இலாபத்தைப் பாதிக்கின்றன. அதிக மாற்று விலையானது வாங்கும் பிரிவின் வருவாயைக் குறைத்து விற்பனைப் பிரிவின் வருவாயைக் கூடுதலாக்கும்; குறைந்த மாற்று விலையானது விற்பனைப் பிரிவின் வருவாயைக் குறைத்து வாங்கும் பிரிவின் வருவாயைக் கூடுதலாக்கும்.

மாற்று விலை நிர்ணயிப்பு சட்டபூர்வமாக அனுமதிக்கப்படும் செயல்முறை என்ற போதும் நிறுவனங்கள் அதைத் தவறாகப் பயன்படுத்துகின்றன .நாடுகளுக்கிடையே காணப்படும் வரி வேறுபாடுகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் தவறான முறையில் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன. சட்டத்தில் உள்ள ஓட்டைகளை தவறாகப் பயன்படுத்தி மாற்று விலையின் மூலம்” சட்டப்பூர்வமாக “கூடுதல் இலாபம் பெறுகின்றன .

பன்னாட்டு நிறுவனங்களில் )MNC) தாய் நிறுவனத்திற்கும் அதன் பல்வேறு துணை நிறுவனங்களுக்குமிடையே வருவாய்களை ஒதுக்கீடு செய்வதற்கு மாற்று விலையிடல் முறையைப் பயன்படுத்த சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் ,நிறுவனங்கள் இந்த நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்தி தங்கள் வரி செலுத்த வேண்டிய வருவாயின் அளவை மாற்றுவதன் மூலம் அவை செலுத்த வேண்டிய ஒட்டுமொத்த வரியின் அளவைக் குறைக்கின்றன. மாற்று விலைப் பொறிமுறையை நிறுவனங்கள் வரி மோசடி செய்வதற்கான வழிமுறையாகப் தவறாகப் பயன்படுத்துகின்றன.

எல்லைக்குட்பட்ட அல்லது எல்லை தாண்டிய உள்குழுப் பரிவர்த்தனைகளில் உருவமுள்ள , அருவமான சொத்து ,சேவைகள் மற்றும் கடன்களின் பரிமாற்றங்கள் ,நிறுவனத்தின் காப்புரிமைகள், வர்த்தக குறியீடுகள், அறிவுசார் சொத்துரிமைகள் என இவை அனைத்துக்குமே

மாற்று விலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக ஒரு நிறுவனத்துடன் இணைந்த வெளிநாட்டு உற்பத்தி அமைப்பிடமிருந்து வாங்கப்படும் பொருட்களின் விலையை அதிகரிப்பதன் மூலம் அந்த நிறுவனத்தின் வரிக்குட்பட்ட வருவாயைக் குறைக்கலாம் .நிறுவனம் அதன் வெளிநாட்டுத் துணை நிறுவனங்களிடம் தனியுரிமத் தொழில்நுட்பம் அல்லது' பிராண்ட் 'பெயரைப் பயன்படுத்துவதற்கான உரிமக் கட்டணங்களைக் கூடுதலாக வசூலிப்பதன் மூலம் ஒரு நிறுவனத்தின் வரிக்குட்பட்ட வருவாயைக் கூடுதலாக்கலாம்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு மாற்றுவிலை நிர்ணயம் குறித்த கை நீளக் கொள்கை (Arm's length principle) வழிகாட்டுதல்களை பொருளாதார ஒத்துழைப்பு ,வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) வழங்கியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் மாற்றுவிலை நீதித்துறை மறுஆய்வு மற்றும் பிற பூசல் தீர்வு வழிமுறைகளுக்கு உட்பட்டவை. சர்வதேச வரிச் சட்டங்கள் பொருளாதார ஒத்துழைப்பு வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) மற்றும் அதன் மதிப்பாய்வுக்கு உட்பட்ட தணிக்கை நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன .இதன் அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை தணிக்கை செய்யப்படுகின்றன.

ஒரு நிறுவனம் தொடர்புள்ள நிறுவனத்துடன் செய்யும் பரிவர்த்தனைகளை, அது தொடர்பில்லா நிறுவனங்களுடன் செய்யும் பரிவர்த்தனைகளைப் போலவே செய்ய வேண்டும் என்பதே கை நீளக் கொள்கை. நிறுவனங்களுக்குள்ளேயான பரிவர்த்தனைகள், நிறுவனங்களுக்கு வெளியேயான பரிவர்த்தனைகளைப் போல் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் மாற்றுவிலைகள் கரக் கொள்கைக்குட்பட்டு நிர்ணயிக்கப்படுகிறதா, இல்லையா என்பது எப்படிக் கண்டறியப்படுகிறது?

ஒரு நிறுவனத்தின் மாற்றுவிலையை அது தொடர்பில்லாத நிறுவனத்துடன் செய்யும் பரிவர்த்தனை விலையுடன் ஒப்பிட்டு இரண்டு விலைகளும் எந்த அளவுக்கு வேறுபடுகிறது என்பது கணக்கிடப்படுகிறது .ஒரு நிறுவனத்தின் மாற்றுவிலையுடன் சந்தைபடுத்துவதற்கான செயல்பாடுகள் ,அபாயங்கள் ஆகியவற்றிற்கான செலவுகளைச் சேர்க்கும் போது கிடைக்கும் விலை ,தொடர்பில்லாத நிறுவனத்திற்கான விலையுடன் பொருந்தி வருகிறதா என சோதனை செய்யப்படும். அவ்வாறு சோதிக்கும் போது இரண்டு விலைகளும் ஏறத்தாழ சமமாக இருக்குமானால் கரக் கொள்கைக்குட்பட்டு மாற்றுவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதையும், இரண்டு விலைகளுக்குமிடையே அதிக வேறுபாடுகள் இருக்குமானால் கரக்கொள்கைக்குட்பட்டு

மாற்று விலை நிர்ணயிக்கப்படவில்லை என்பதையும் அறிய முடியும்.

மாற்றுவிலைகளைப் பயன்படுத்திப் பன்னாட்டு நிறுவனங்கள் எவ்வாறு வரிமோசடியில் ஈடுபடுகின்றன?

ஒரு பன்னாட்டு நிறுவனம் அதன் உள் விலைகளைச் சரிசெய்வதன் மூலம் இலாபத்தை வரிப் புகலிடங்களுக்குக் கடத்த முடியும் ,அங்கு அவர்கள் வரிக் குறைப்பு அல்லது வரி விலக்கு பெற இயலும் ,மேலும் செலவுகளை அதிக வரி கொண்ட நாடுகளுக்குக் கடத்தலாம் ,அங்கு அவை வரி வருவாயிலிருந்து கழிக்கப்படுகின்றன. இதன் மூலம் வரி வருவாய் ஒரு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு ,ஒரு வரிப் புகலிடத்திற்கு மாற்றப்பட்டு ,பன்னாட்டு நிறுவனங்களின் பணக்கார உரிமையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

நிறுவனங்கள் அதிக வரி நிலவும் நாடுகளில் உள்ள தங்கள் பிரிவுகளிடமிருந்து அதிக விலையில் விற்பதன் மூலமோ அல்லது அவற்றிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்குவதன் மூலமோ அவற்றின் வருவாய், இலாபத்தைக் குறைக்கின்றன. அதே சமயம் குறைந்த வரி நிலவும் நாடுகளில் உள்ள பிரிவுகளிடமிருந்து குறைந்த விலையில் விற்பதன் மூலமோ அல்லது அவற்றிடமிருந்து அதிக விலையில் வாங்குவதன் மூலமோ அவற்றின் வருவாய், இலாபத்தை அதிகரிக்கின்றன. அதிக வரி உள்ள நாடுகளில் மாற்று விலைகளின் மூலம் நிறுவனங்கள் தங்கள் வரவைக் குறைத்து, செலவை அதிகரித்துக் காட்டி, வரிப் புகலிடங்களுக்கு இலாபத்தைக் கடத்த முடிகிறது.

குறைந்த வரி விகிதங்களைக் கொண்ட நாடுகளுக்கு மாற்றப்படும் பொருட்களை அதிக விலைக்கு உயர்த்துவதன் மூலம் அதிக வரியுள்ள நாடுகளின் நிறுவனங்கள் வருவாயையும், பெருநிறுவன வரிகளையும் குறைத்து அதிக இலாபங்கள் பெறுகின்றன.

உதாரணமாக இந்தியாவில் உள்ள' அப்பு "என்ற பொம்மை நிறுவனம் 20 ரூபாய் செலவில் பொம்மை தயாரித்து அதே 20 ரூபாய் விலைக்கு மொரிசியஸில் உள்ள" மிஷா "என்ற அதன் துணை நிறுவனத்திற்கு விற்கிறது" .மிஷா "வாடிக்கையாளருக்கு பொம்மையை 300 ரூபாய்க்கு விற்கிறது .இந்தியாவில் மொரிசியஸை விட நிறுவன வரி அதிகம் .ஆகவே இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் விற்பதன் மூலம் அப்பு தன் வருவாயைக் குறைத்து வரிவிதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறது .மொரிசியஸில் அதிக விலைக்கு விற்பதால் இலாபமும் அதிகரிக்கும் ஆனால் அங்கே வரி குறைவு என்பதால் கூடுதல் வருவாய் பெற முடியும்.

மாற்றுவிலை குறித்து வரி நீதிக்கான வலையமைப்பு (Tax justice network) கூறும் விளக்கம்

பின்வருமாறு:

*மாற்று விலை நிர்ணயம் என்பது பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் நாடுகளில் இருந்து இலாபத்தை மாற்றுவதற்கும் ,செயற்கையாக அதிக விலைக்குப் பொருட்களையும் சேவைகளையும் விற்கும் ,வரிப் புகலிடத்தில் உள்ள ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு மாற்றும் ஒரு நுட்பமாகும். வேறொரு நாட்டில் உள்ள அதன் துணை நிறுவனத்திடமிருந்து உயர்த்தப்பட்ட கட்டணத்தை வசூலிக்க வரிப் புகலிடத்தில் உள்ள அதன் துணை நிறுவனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ,உதாரணமாக ஒரு பேனாவை 200 டாலருக்கு விற்கும் வரிப் புகலிடத்தில் உள்ள துணை நிறுவனத்திடமிருந்து பேனாப் பெட்டிகள் வாங்குவதன் மூலம் ,பன்னாட்டு நிறுவனம் தனது இலாபத்தை நாட்டை விட்டு" நகர்த்துகிறது ."*

*மற்றொரு உதாரணம்: ஈக்வடாரில் வாழைப்பழம் உற்பத்தி செய்ய ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு 100$ செலவாகும் என்று வைத்துக் கொள்வோம். அது ஈக்வடாரில் எந்த இலாபமும் இல்லாமல்100$ க்கு வரிப் புகலிடத்தில் அமைந்துள்ள ஒரு துணை நிறுவனத்திற்கு வாழைப்பழப் பெட்டியை விற்கிறது. வரிப் புகலிடத்தில் உள்ள துணை நிறுவனம் உடனடியாக அந்தப் பெட்டியைப் போலந்தில் உள்ள ஒரு துணை நிறுவனத்திற்கு300$ க்கு விற்று ,வரிப் புகலிடத்தில் 200$ இலாபம் ஈட்டுகிறது. அந்தப் போலந்துத் துணை நிறுவனம் ஒரு பேரங்காடியில் $300 உண்மையான சந்தை விலையில் வாழைப்பழப் பெட்டியை விற்கிறது ,போலந்தில் செய்யப்படும் விற்பனையில் எந்த இலாபமும் இல்லை. இதன் விளைவாக ,பன்னாட்டு நிறுவனம் ஈக்வடாரிலும், போலந்திலும் எந்த வரியும் செலுத்த வேண்டியதில்லை .மேலும் வரிப் புகலிடத்திற்கு மாற்றப்பட்ட இலாபத்திற்கும் $200 வரி விதிக்கப்படாது.*

*இவ்வாறு, பன்னாட்டு நிறுவனங்கள் வரி செலுத்தும் பொறுப்பைத் தவிர்த்து ,தாங்கள் செயல்படும் நாடுகளுக்குப் பங்களிக்காமல் மோசடி செய்கின்றன.*

*பன்னாட்டு நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வதற்கு அல்லது வரியைத் தவிர்ப்பதற்குக் கடைப்பிடிக்கும் மிகவும் பொதுவான வழி ,அவர்கள் பெறும் இலாபத்தை அவர்கள் உண்மையாக உற்பத்தி ,வணிகம் செய்யும் நாடுகளிலிருந்து வரிப் புகலிடங்களுக்கு மாற்றுவதன் மூலம்தான். இதனால் அந்நிறுவனம் உற்பத்தி ,வணிகம் செய்யும் நாட்டில் அதன் இலாபத்தைக் குறைத்துக் காட்ட முடிகிறது என்பதால் குறைவாகவே வரிசெலுத்துகிறது அல்லது வரி செலுத்தவே தேவை இல்லாமற்போகிறது. மேலும் நாட்டிற்கு வெளியே கடத்தப்பட்ட இலாபத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை.*

*எடுத்துக்காட்டாக ,ஒரு பன்னாட்டு நிறுவனம் அயர்லாந்தில் ஏட்டளவில் மட்டுமே ஒரு போலி நிறுவனத்தை அமைத்து ,அதன் வர்த்தகச் சின்னத்தின் (brand) உரிமையாளராக அதனை மாற்ற முடியும். போலி நிறுவனம் பன்னாட்டு நிறுவனத்தின் பிற துணை நிறுவனங்களிடம் (அதாவது மற்ற நாடுகளில் சேவைகளை விற்கும் நிறுவனங்களிடம்) வர்த்தக சின்னத்தைப் பயன்படுத்த அதிக உரிமக் கட்டணம் வசூலிக்கிறது. இது நிறுவனங்களுக்கு அவை வரிப் புகலிடத்திற்கு செலுத்த வேண்டிய செலவுகளைத் தோற்றுவிக்கிறது ,திறம்பட அவர்களின் இலாபங்களைக் குறைத்து வரிப் புகலிடத்திற்குக் கடத்துகிறது.*

*நிறுவனங்கள் சர்வதேச அளவில் பரிமாறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான இறக்குமதி வரிகளைத் தவிர்ப்பதன் மூலம் ஒன்றோடொன்று தொடர்புடைய பரிவர்த்தனைகளுக்கான தங்கள் செலவையும் குறைக்கின்றன.*

*அமேசான் ,மைக்ரோசா..ப்டு ,கூகுள், மெட்டா, அடோப் ,ஏஓஎல் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் ,மாற்று விலைகளில் சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்தி பல மில்லியன் முதல் பில்லியன் டாலர்கள் வரையிலான வருவாயை வரிக் கடப்பாடுகளிலிருந்து விடுவித்து இலாபத்தைப் பெருக்கியுள்ளன. உள்நாட்டு நிறுவனங்களும் மாற்று விலைகளில் சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் வரி ஏய்ப்பில் ஈடுபடுகின்றன.*

வரி மோசடிக்கான நிஜ உலக உதாரணங்கள் பின்வருமாறு

1. கூகுள்:

அக்டோபர்2010 இல் ப்ளூம்பெர்க் நிருபர் ஒருவர் எழுதியுள்ளார்: "டபுள் ஐரிஷ் "மற்றும்" டச்சு சாண்ட்விச் "போன்ற பெயர்களில் அழைக்கப்படும் மாற்றுவிலை விளையாட்டுகள் மூலம் மூன்று ஆண்டுகளில் எப்படி கூகிள் இங்க் நிறுவனம் ,தனக்கான வரிகளில் 3.1$ பில்லியனைக் குறைத்தது என்றும், இறுதியில் வரிவிகிதம் 2.4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது என்றும் அவர் விளக்கமாகச் சொல்லியுள்ளார்.

கூகுள் நிறுவனம் சிங்கப்பூரில் ஒரு மண்டலத் தலைமையகத்தையும் ஆஸ்திரேலியாவில் துணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது .ஏனென்றால் சிங்கப்பூரும் ஒரு வரிப் புகலிடமாகச் செயல்படுகிறது. ஆஸ்திரேலியத் துணை நிறுவனம் அதன் பயனர்களான ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு விற்பனை ,சந்தைப்படுத்தும் சேவைகள் வழங்குகிறது. ஆஸ்திரேலியத் துணை நிறுவனம் உலகளவில் கூகுளுக்கு ஆய்வுச் சேவைகளும் வழங்குகிறது. 13-2012 நிதியாண்டில் ,

கூகுள் ஆஸ்திரேலியா 358$ மில்லியன் வருவாயில் சுமார் 46$ மில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது. 4.5$மில்லியன் வரிக் கடன் பெற்ற பிறகு ,அது செலுத்த வேண்டிய கார்ப்பரேட் வரியின் மதிப்பு 7.1$மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்.

ஆஸ்திரேலியாவில் கூகுள் ஏன் அதிக வரி செலுத்தவில்லை என்று கேட்டதற்கு ,கூகுள் ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவரான மெயில் கார்னெகி சொன்ன பதில், அவர்களின் தலைமையிடம் இருக்கும் நாடான சிங்கப்பூரின் பங்கு ஏற்கெனவே செலுத்தப்பட்டு விட்டது என்பதே. 66$ பில்லியன் வருவாய்க்கு எதிராக 3.3$ பில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த வரி செலுத்தியதாக கூகுள் தெரிவித்துள்ளது. சிங்கப்பூரின் இறுதி வரி விகிதங்கள் %19 மட்டும்தான். இது அமெரிக்காவின் அப்போதைய 35% பெருநிறுவன வரி விகிதத்தை விடக் குறைவு. 2019இல் , ஆஸ்திரேலியாவின் வரி தவிர்ப்புப் பணிக் குழுவுடனான 2008 - 2018 நிதியாண்டு தொடர்பான "நீண்டகால "வரிச் சர்ச்சையைத் தீர்க்க 481.5 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர் செலுத்துவதாக கூகுள் அறிவித்தது.

2. கோகோ கோலா

கோகோ கோலா தனது வெளிநாட்டுத் துணை நிறுவனங்களுக்கு இடையேயான நிறுவன உரிம ஏற்பாடுகளுக்கு மாற்று விலைகளின் மூலம் குறைந்த கட்டணம் வசூலித்ததாக அமெரிக்க வருவாய்த் துறை வழக்குத் தொடர்ந்தது. 2020இல் அமெரிக்க வரி நீதிமன்றம் கோகோ கோலாவை 3.3 பில்லியன் டாலர் கூடுதல் வரி செலுத்துமாறு தீர்ப்பளித்தது.

3. மெட்டா

மெட்டா நிறுவனம் (முன்பு ஃபேஸ்புக்) 2010இல் 6.5$ பில்லியன் அசையாச் சொத்துக்களை அயர்லாந்திற்கு மாற்றியதன் மூலம் அதன் வரிக் கட்டணத்தை கணிசமாகக் குறைத்ததாக அமெரிக்க வருவாய்த் துறை குற்றஞ்சாட்டுகிறது. இந்த வழக்கில் அமெரிக்க வருவாய்த் துறை வெற்றி பெற்றால் ,வட்டி மற்றும் அபராதத்துடன் சேர்த்து மெட்டா 9$ பில்லியன் வரை செலுத்த வேண்டியிருக்கும்.

4. மெட்ரானிக்

அயர்லாந்தை தளமாகக் கொண்ட ,மருத்துவ சாதனத் தயாரிப்பாளரான மெட்ரானிக் உலகளவில் குறைந்த வரி செலுத்தும் புகலிடங்களுக்கு அறிவுசார் சொத்துக்களை மாற்றியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கு 2005 மற்றும்2006 ஆம் ஆண்டுக்கான வரி ஆண்டுகளில் மெட்ரானிக் மற்றும் அதன் போர்ட்டோரிக்கன் உற்பத்தித் துணை நிறுவனங்களுக்கு இடையிலான

அருவச் சொத்துக்களின் பரிமாற்றம் குறித்தது. நீதிமன்றம் முதலில் மெட்ரானிக்கிற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது .அமெரிக்க வருவாய்த் துறை இதற்கெதிராக மேல்முறையீடு செய்துள்ளது.

நிகோலஸ் ஷாக்ஸான் தனது “புதையல் தீவுகள்” புத்தகத்தில் பெருநிறுவன வரி மோசடி குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்: இன்று வரை ,கணக்கியல் தரநிலைகள் இந்த வகையான தந்திரங்களைத் திறம்பட மறைக்கின்றன, நிறுவனங்கள் வெவ்வேறு நாடுகளிலிலிருந்து பெறப்படும் முடிவுகளை) பெரும்பாலும்" சர்வதேசம் "என்று அழைக்கப்படும்) ஒரே வகையாகக் காட்ட அனுமதிக்கின்றன ,இதில் யாருக்கு என்ன இலாபம் என்பதைப் பிரித்தறிய முடியாது.“

பன்னாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களாக இருப்பதற்கும் ,சிறிய போட்டியாளர்களை விட அவை பொதுவாக வேகமாய் வளர்வதற்கும் மிக முக்கியமான காரணங்களில் ஒன்று மாற்று விலை அல்லது தவறான விலை எனக் கூறும் நிகோலஸ் ஷாக்ஸன் உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களின் சக்தியைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் வரிப் புகலிடங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார்.